# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 10 செவ்வாய்க்கிழமை(26-09-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:235




பலாலியில் நேற்று இடம்பெற்ற நகைகள் கையளிப்பு வைபவத்தில் நகைகளைப் பார்வையிட்டபடி இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல காணப்படுகிறார். படத்தின் இடதுபுறத்தில் யாழ். ஆயர், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர், யாழ். அரச அதிபர் ஆகியோரும் - வலதுபுறத்தில் சிவில் நிர்வாக இணைப்பதிகாரி பிரிகேடியர் திலகரத்தின, யாழ். மாவட்ட பிரதித் தளபதி நிஹால் மாரம்பே ஆகியோரும் - காணப்படுகின்றனர்.

# படையினர் மீட்ட தங்க நகைகள் அரச அதிபரிடம் ஒப்படைப்பு!

## 11லட்சம் ரூபா பெறுமதியானவை

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் படையினரின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் நல்லூர்ப் பகுதியில் மிதி வெடி அகற்றும் பணியில் ஈடுபட்டி ருந்த படையினர் அங்கு வீடு ஒன் றில் இருந்து மீட்ட பதினொரு லட் சம் ரூபா பெறுமதியான தங்க நகை களை, இராணுவத் தளபதி லெப்டி னன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல யாழ். அரச அதிபர் க.சண்முகநாத னிடம் நேற்றுக் கையளித்தார்.

பலாலிப் படைத்தளத்தில் நேற் றுக் காலை இடம்பெற்ற வைபவம் ஒன்றில் வைத்து இந்த நகைகள் ஒப்படைக்கப்பட்டன.

மேற்படி வைபவத்தில் ராணுவத் தளபதியுடன் யாழ்.மாவட்டப் பிரதித் தளபதி மேஜர் ஜெனரல் நிஹால் மாரம்பே, யாழ்.மாவட்ட சிவில் நிர் வாக அதிகாரி பிரிகேடியர் ரி.ஜி.தில கரட்ண ஆகியோரும் கலந்துகொண் டனர்.

யாழ். அரச அதிபர் க.சண்முக நாதன், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாய கம் மற்றும் சில அரசியல் கட்சிக ளின் பிரமுகர்களும் நேற்றைய நிகழ்வில் பங்குபற்றினர்.

நல்லூர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்த சட்டி ஒன்றில் இருந்து மீட்கப்பட்ட தாலிக்கொடி, பதக்கம், சங்கிலி, தோடுகள், காப்புகள் போன்ற நகை களே நேற்றுக் கையளிக்கப்பட் டவை ஆகும்.

சம்பந்தப்பட்டவர்களை இனங் கண்டு பிரஸ்தாப நகைகளை வழங் கும்படி யாழ். அரச அதிபர் கேட்கப் பட்டுள்ளார். (இ-3-139-173)

## திலீபன் நினைவு சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம்,செப்.26

அஹிம்சை வழியில் உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த தியாகி திலீபனின் 13ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று அனுஷ்டிக்கப் படுவதையொட்டி குடாநாட்டில் பல இடங்களில் அவரின் திருவுருவப் படத்துடன் கூடிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

வன்னி மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இராணுவக் கட்டுப் பாடற்ற பகுதிகளில் பல நிகழ்வுகள் இன்று ஏற்பாடாகியுள்ளன. (இ-3)

# கொழும்பு வாழ் தமிழர் விவரங்கள் தேர்தலுக்கு முன்னர் கணனி மயம்!

## பாதுகாப்புக் கருதி ஏற்பாடு!!

கொழும்பு, செப்ரெம்பர்.26

**கொழும்பு மாநகரின் பாதுகாப்புக் கருதி, தேர்த லுக்கு முன்னர், அங்கு வாழும் பல லட்சம் தமிழ் மக்களின் பூரண விவரங்கள் கொண்ட தகவல் கள் கணனி மயப்படுத்தப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளைப் பொலீஸார் செய்து வருகின்றனர்.**

கொழும்பில் அமைந்துள்ள இரு நூறுக்கும் அதிகமான விடுதிகளில் (லொட்ஜ்களில்) தங்கியுள்ள சுமார் 10 ஆயிரம் தமிழர்களின் சகல விவ ரங்களையும் கணனி மயப்படுத்தும் பணிகளைப் பொலீஸார் மேற் கொண்டு வருகின்றனர். அந்த வேலைகள் சில நாள்களில் பூர்த்தி யானதும் சொந்தவீடுகள், வாடகை வீடுகளில் வாழும் சகல தமிழர்க ளினதும் விவரங்கள் கணனி மயப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## அநுராவின் அலுவலகம் மீது தாக்குதல்!

கொழும்பு,செப்.26

கம்பஹா மாவட்டத்தில் ஹொர கல்லவில் அமைந்துள்ள ஐ.தே. கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்கவின் அலு வலகம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் தாக்குதலுக்கு உள் ளானது.

சொகுசு வாகனங்களில் வந்து இறங்கிய இனந்தெரியாதவர்கள் அலுவலகத்துக்குள் புகுந்து அங் குள்ள தளபாடங்களையும், கட்டவுட் டுக்களையும் சேதமாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)



ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சுரேஷ் அணியினர் நடத் திய செய்தியாளர் மாநாட் டில் அதன் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச் சந்திரன் உரையாற்று வதைப் படத்தில் காண லாம். படத்தின் இடது புறத்தில் முதன்மை வேட் பாளர் தர்மராஜா வில்ச னும், வலதுபுறத்தில் வேட் பாளரான என்.ஏ.ஜெயக் கொடியும் காணப்படுகின்ற னர். படம்:- *கொனிக்கா கலர்லாப்*

# இராணுவ நடவடிக்கையை நிறுத்தக் கோரி அனைத்துக் கட்சிகளும் குரல் எழுப்ப வேண்டும்

## செய்தியாளர் மாநாட்டில் சுரேஷ் பிரேமச்சந்திரன் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.26

யாழ். மக்கள் நிம்மதியாக வாழ வும், சுதந்திரமாக வாக்களிக்கவும் வசதியாக தற்சமயம் மேற்கொள்ளப் படும் இராணுவ நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என்று அரசாங் கத்தையும், சர்வதேச சமூகத்தை யும் தேர்தலில் போட்டியிடும் சகல அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் ஒரே குரலில் கோர வேண்டும். இது விடயமாகக் கலந் துரையாட சகல அரசியல் கட்சிக ளுக்கும், சுயேச்சைக் குழுக்களுக் கும் அழைப்பு விடுக்கின்றேன்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் சுரேஷ் அணியின் செயலாளர் நாய கமும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந் திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று யாழ். நகரில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நடத் திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இப்படிக் கூறினார்.

(9ஆம் பக்கம் பார்க்க)

# கப்பல் பயணிகள் வசதி கருதி இன்று முதல் புதிய நடைமுறை

யாழ்ப்பாணம்,செப்.26

பருத்தித்துறைக்கும் திருகோண மலைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்ப லில் பயணம் செய்பவர்களுக்காகப் புதிய நடைமுறைகள் சில இன்று முதல் அமுலுக்கு வருவதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரி வித்துள்ளது.

புதிய நடைமுறைகள் வருமாறு:-

★ பாதுகாப்பு அனுமதி பார்த் தல், பதிவுகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றுக்குத் தினமும் 12.30 மணிமுதல் பொதுமக்கள் உள் செல்ல அனுமதிக்கப்படுவர். வாச லில் வைத்து வழங்கப்படும் இலக் கத்தின் அடிப்படையில் உள்ளே அனுமதிக்கப்படும் பயணிகள் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

★ இந்தப் பணிகளுக்காக தின மும் நூறு பேருக்கே இலக்கங்கள் வழங்கப்படும்.

★ இந்தப் பணிகள் தினமும்

(14ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் சுதந்திரத்துடன் வாழ உறுதியாக செயற்படக் கூடியவர்களையே தெரிவு செய்க!

## யாழ். ஆயர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப்.26

தமிழ் மக்களுடைய இன்னல் கள் நீங்கி யுத்தம் ஓய்ந்து நீதி யோடு கூடிய சமாதானத்தோடும் சுதந்திரத்துடனும் வாழ்வதற்கு யார் உறுதியான செயற்பாடுகளில் இறங் குவார்களோ அவர்களையே உங் கள் பிரதிநிதிகளாக தெரிவு செய் வது உங்களது இன்றைய முக்கிய கடமையாகும்.

இவ்வாறு யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வலியு றுத்தி உள்ளார்.

பொதுத் தேர்தல் குறித்து "பாது காவலன்" பத்திரிகைக்கு கருத்துத் தெரிவிக்கையில் ஆயர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது:-

இலங்கை வாழ் மக்கள் குறிப் பாக வடபகுதியில் இன்னல்களை யும் இடம்பெயர்வுகளையும் உயி ரிழப்புகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் 11ஆவது நாடாளுமன்ற பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பும் ஆயத் தங்களும் நடைபெற்றுக்கொண்டிருக் கின்றன.

இன்றைய இந்த நிலையில் யாழ்.

(2ஆம் பக்கம் பார்க்க)

# மாத்தளையில் அரசுக்கு எதிராக ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டம்

## பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம்

கொழும்பு, செப்.26

மாத்தளையில் அரசுக்கு எதி ராக ஆர்ப்பாட்டம் நடத்திய ஜே. வி.பி. அமைப்பினர் மீது பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி யதுடன் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதா வது:-

மாத்தளையில் அமைந்துள்ள ஜே.வி.பியின் தேர்தல் அலுவலகம் மீது கடந்த சனிக்கிழமை இரவு நடத்தப்பட்ட தாக்குதலை கண் டித்து நூற்றுக்கணக்கானோர் நேற் றுக் காலை 11.30மணியளவில் மாத்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சமுர்த்தி உத்தியோகத்தர் கடமை நேரத்தில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடக்கூடாது

## மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, செப்.26

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கடமைநேரத்தில் தேர்தல் பிரசாரம் மற்றும் அரசியல் கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் சமுர்த்தி உத்தியோகத்தர்களை கடமை நேரத்தில் தேர்தல் பிரசாரத்துக்கும். ஏனைய கட்சி நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தி வருகின்றது என ஐ.தே.கட்சியின் பிரமுகர்களான கரு ஜெயசூரிய, காமினி அத்துக்கோறள மற்றும் ரவி கருணநாயக்க ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தமை தெரிந்ததே.

இந்த மனு மீதான விசாரணை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி அசோக டி சில்வா தலைமையில் நேற்று இடம்பெற்றது.

விசாரணையின் முடிவில் அலுவலக நேரத்தில் அரசியல் கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு சமுர்த்தி ஆணையாளருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-7)

# பகிடிவதையை ஒழிக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## புதுமுக மாணவர்களுக்கான வரவேற்பு வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம்,செப்.26

பகிடிவதை பல்கலைக்கழகத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பகிடிவதையை இல்லாமல் செய்ய வேண்டும். மருத்துவபீட மாணவர்கள் இதற்கு முன்மாதிரியாகத் திகழ்ந்து வருகிறார்கள்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத்தின் மொழியியற்றுறை சிரேஷ்ட மாணவ ஆலோசகர் திருமதி எஸ். கைலைநாதன் தெரிவித்தார்.

நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விஞ்ஞானபீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட புகுமுக மாணவர்களுக்கான வரவேற்பு விழாவில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் சிரேஷ்ட மாணவர்களும் புகுமுக மாணவர்களும் புரிந்துணர்வுடன் கருத்து முரண்பாடு இன்றி விட்டுக்கொடுத்து ஒற்றுமையுடனும், நட்புறவுடனும் பழக வேண்டும். மாணவர்களாகிய உங்கள் நலன் கருதி மாணவ ஆலோசகர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உங்கள் பிரச்சினைகளை மாணவ ஆலோசகர்களுக்கோ, பீடாதிபதிக்கோ அல்லது துணைவேந்தருக்கோ எந்தவித தயக்கமுமின்றித் தெரிவிக்கலாம் - இப்படி அவர் தெரிவித்தார்.

விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராகப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொண்டார்.மற்றும் இந்த நிகழ்வில் உதவிப் பதிவாளர் ஜெ.ஜெயக்குமார், சிரேஷ்ட மாணவ ஆலோசகர் அலுவலகத்தைச் சேர்ந்த ஜி.சந்திரசேகரம், பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை கலைப்பீட புகுமுக மாணவர்களுக்கான வரவேற்பு விழாவும் நேற்று நடைபெற்றது. கலைப்பீடாதிபதி எஸ்.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழ்த்துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராசா, உதவிப் பதிவாளர் ஜெ.ஜெயக்குமார் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (இ-10-ரி)

# யாழ்.மக்கள் நிலைமை குறித்து பாப்பரசரின் பிரதிநிதி கவலை

யாழ்ப்பாணம், செப்.26

"யாழ்.மக்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்காக நான் வேதனைப் படுகிறேன். எனது அன்பையும் ஆழ்ந்த அனுதாபங்களையும் அவர்களுக்குத் தெரிவித்து நான் அவர்கள் துன்பங்களைக் கரிசனையோடு கேட்டதாகத் தெரிவியுங்கள்".

இவ்வாறு பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி மேதகு தோமஸ் சென்நாண் ஆண்டகை யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்திடம் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மக்கள் அனுபவிக்கும் துன்பமான நிலையையும் இடம்பெயர் அவலங்களையும், எதிர்நோக்கும் யுத்த அழுத்தங்களையும் யாழ். ஆயர் தெளிவாக விவரித்த போது கவனமாகவும் கரிசனையாகவும் செவிமடுத்த அவர் "யாழ்.மக்களின் துன்பங்களையும், துயரங்களையும் வத்திக்கானுக்கும் பாப்பரசருக்கும் தெரிவிப்பேன். எனது செபத்தில் யாழ்.மக்களை நினைத்துக் கொள்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் தான் அமைதியும் சமாதானமும் நிறைந்த ஒரு பாதையைத் திறந்து விட வேண்டும்" என்றார். (இ-ரி)

# சிறுமி மீது பாலியல் வல்லுறவு

மட்டக்களப்பு,செப்.26

வாழைச்சேனை விநாயகபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் 7 வயதுச் சிறுமி ஒருத்தி சம்பந்தப்பட்ட பாடசாலை ஆசிரியர் ஒருவரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும் -

பாதிப்புக்குள்ளான சிறுமி நேற்று மாலை மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7-21)

# தமிழர் சுதந்திரத்துடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களைப் பொறுத்தவரையில் இப்பொதுத் தேர்தல் முக்கியமான தொன்றல்ல என்றே கூறவேண்டும். அடுத்து என்ன நடக்கப்போகிறது? நாம் இனி எங்கே ஓடவேண்டும்? அடுத்த நேர உணவுக்கான வழி என்ன? எம் உயிரைப்பாதுகாத்துக் கொள்ள என்ன செய்யவேண்டும்? என்ற கேள்விகளுக்கான பதிலே அவர்களுக்கு முக்கியமாக உள்ளது.

இருந்தும் ஜனநாயக மரபுகளையும், எமது அரசியல் எதிர்காலத்தையும் கருத்திற் கொண்டு எதிர்வரும் பொதுத் தேர்தலை நாம் கவனத்தில் எடுக்கவேண்டியவர்களாக உள்ளோம்.

### அடிப்படை உரிமை

தேர்தலில் வாக்களிப்பது ஜனநாயக முறைப்படி ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட ஓர் அடிப்படை உரிமையாகும். இதனை உரிய விதமாகப் பாவிப்பதும், பயன் படுத்துவதும் ஒவ்வொருவரதும் பொறுப்பான கடமையாகும்.

இந்தக் கடமையை ஒவ்வொருவரும் தெளிந்த மனத்துடனும், உறுதியான முடிவுடனும் தமிழ் மக்கள் அனைவரதும் சுதந்திரமும் சுபீட்சமுமான எதிர்காலத்தை மனதில் கொண்டு செயற்படுத்த வேண்டும் என்று அழைப்பு விடுக்கிறோம்.

தமிழ் மக்களின் ஒற்றுமையையும், பலத்தையும் கேள்விக்குறியாக்கவும், அதனைச் சாதகமாகவும் ஆக்கியுள்ள பலருக்கு தெளிவாக உணர்த்தவும் உறுதிப்படுத்தவும் வேண்டிய நேரம் இது.

வன்முறைக் கலாசாரம் தேர்தல் காலத்திலும் தலைதூக்கியுள்ள வேளையில் எவ்வித வற்புறுத்தலோ, பயமுறுத்தலோ இன்றி மக்கள் தங்கள் வாக்குகளை விருப்புடனும் சுதந்திரத்துடனும் அளிக்க ஆவன செய்யப்பட வேண்டும் என சம்பந்தப்பட்டவர்களுக்கு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

கொடிய போர் அகன்று இயல்பு வாழ்க்கை ஏற்பட்டு தமிழ் மக்கள் அனைவரும் அமைதியாக வாழ இத்தேர்தல் இறைவனின் ஒரு கருவியாக மாற இறை ஆசீர் வேண்டுகிறோம் - என்று தெரிவித்துள்ளார்.


**தவறிவிட்டது**

252, பருத்தித்துறை வீதி, நல்லூரைச் சேர்ந்த

**சிவசந்திரபோஸ் அருச்சுனா**

என்பவருடைய விசேட அடையாள அட்டை (0902042593) யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும்.

**போஸ்கோ**

252,பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(C/13078)

**விற்பனைக்கு**

அச்சுக்கூடத் தேவைக்கான புதிய

**PERFORATION MACHINE**

விற்பனைக்கு உண்டு.

**போஸ்கோ**

இல.3, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(C/13079)

**ENGLISH SPOKEN AND GRAMMAR**

By: **BRITTO**

புதிய பிரிவு

ஆரம்பம்: 27.09.2000

புதன்கிழமை

நேரம்: 11.00 மணி

(பழைய நேரம்)

இடம்: கொக்குவில்.

(ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில். )

(C/13064)

**ராஜா**

(யாழ்ப்பாணம்)

கார்த்திக், ரோஜா, அஜித்

மற்றும் பலரின் நடிப்பில்

**உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்**

காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே)

**நாகம்ஸ்**

(சுன்னாகம்)

விஜய், சிம்ரன், மணிவண்ணன் நடிப்பில்

இனிய காதல் காவியம்

**துள்ளாத மனமும் துள்ளும்**

(ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)




நல்லூர்ப் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் புதைத்து வைக்கப்பட்டிருந்த சட்டி ஒன்றிலிருந்து படையினரால் 1995 ஆம் ஆண்டு மீட்கப்பட்ட நகைகளைக் காண்கிறீர்கள். பலாலிப் படைத்தளத்தில் நேற்று இடம்பெற்ற கையளிப்பு வைபவத்தில் அவை பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

# அதிபர் சேவை பதவி உயர்வு நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம்

யாழ்ப்பாணம்,செப்.26

இலங்கை அதிபர் சேவையில் உள்ளோரை சேவை மூப்பு அடிப்படையில் அடுத்த தரங்களுக்குப் பதவி உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை ஒக்ரோபர் மாத முடிவுக்குள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

சேவை மூப்பு அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையில் அடுத்த தரங்களுக்கான பதவி உயர்வுக்காக 1991ஆம் அண்டுப் போட்டிப் பரீட்சை மூலம் அதிபர் தரம் IIக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும், 1993ஆம் ஆண்டு பதில் அதிபராகக் கடமை புரிந்து அதிபர் தரம் IIIக்கும், IIக்கும் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கும் இதுவரை நேர்முகப் பரீட்சை நடைபெறவில்லை.

இவர்களின் நிலை தொடர்பாக கல்விச் சேவை ஆணைக் குழுவின் செயலாளர் எம்.டி.பந்துசேனாவோடு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது இவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு உகந்த சூழ்நிலை தற்போது இருக்க வில்லை என்றும்- பொதுத் தேர்தல் முடிவடைந்ததும் யாழ். மாவட்டத்துக்கு சிரேஷ்ட அதிகாரி ஒருவரை அனுப்பி ஒக்ரோபர் மாத முடிவுக்குள் நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கு உறுதி அளித்துள்ளதாகவும் - த.பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஏற்கனவே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய தகுதியுடையவர்களுக்கு அடுத்த தரங்களுக்குப் பதவி உயர்த்துவதற்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் ஓரிரு தினங்களுக்குள் அவர்களுடைய பதவியுயர்வுக் கடிதங்கள் கிடைக்கும் எனவும் மேலும் அவர் தெரிவித்தார். (இ-7)

# யாழ். மேல் நீதிமன்றத்துக்கு வழக்குகளை மாற்றக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.26

கொழும்பு, வவுனியா மேல் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள யாழ். இளைஞர்கள் இருவரது வழக்குகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பான பக்ஸ் செய்தி ஒன்றினை அவர் பிரதம நீதியரசருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களான திருநாவுக்கரசு குமாரதாசன் என்பவர் மீது கொழும்பு மேல் நீதிமன்றத்திலும், தியாகராசா குகதாசன் என்பவர் மீது வவுனியா மேல் நீதிமன்றத்திலும் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும்-

மேற்படி இரு வழக்குகளையும் பிரதம நீதியரசரின் பணிப்பின் பேரில் அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகவிருக்கும் யாழ். மேல் நீதிமன்றத்துக்கு மாற்றுவதற்கு சட்டமா அதிபருக்கு பணிக்குமாறும் அவர் இந்த பக்ஸ் செய்தியில் தெரிவித்துள்ளார். (இ-5)

## தேர்தலையொட்டி அரச ஊழியர்

# இடமாற்றம் செய்யப்பட்டால் சங்கம் நடவடிக்கை எடுக்கும்

கொழும்பு.செப்.26

நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு அரசாங்க உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படுவார்களானால் அதற்கு எதிராக வழக்குத் தொடரப்படும்.

மேற்கண்டவாறு நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

உத்தியோகத்தர்கள் எவரும் இடமாற்றம் செய்யப்பட்டால் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளருக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் எனவும் சங்கம் அறிவித்துள்ளது. (இ-7-20)


**16 ஆவது நாள் நினைவஞ்சலி**

மல்லாகம் பண்டித மாணவ கழகத்தலைமை ஆசான் மூதறிஞர், மஹாவித்துவான், இலக்கணவித்தகர், செந்தமிழ்த் திலகம், பண்டிதர்


**இ.நமசிவாய தேசிகர்**

அவர்கள்

தமிழகத்தில் சிவபதமெய்திய 16 ஆவது நாள் நினைவில் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

மல்லாகம் பண்டித மாணவ கழகத்தினர்.

(78743)




*செய்தி :-* ஈரான் ஏவுகணைச் சோதனை; அமெரிக்காவுக்கு அச்சுறுத்தல்!

பணயக்கைதிகளை விடுவிக்கும் நடவடிக்கை

# பிலிப்பைன்ஸில் ராணுவத் தாக்குதல்; 100 இஸ்லாமியத் தீவிரவாதிகள் பலி!

மணிலா,செப்ரெம்பர்.26

**பிலிப்பைன்ஸில் ராணுவம் மேற்கொண்டுவரும் தாக்குதல் நடவடிக்கைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட இஸ்லாமியத் தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். ஆனாலும் தீவிரவாதிகளின் பிடியில் உள்ள பணயக்கைதிகளை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்று; இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**

பிலிப்பைன்ஸின் தெற்குப் பகுதியில் உள்ள ஜோலோ தீவில் 'அபுசாயப்' அமைப்பைச சேர்ந்த இஸ்லாமியத் தீவிரவாதிகளால் பணயம் வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள உட்பட 17பேரை விடுவிக்க ராணுவம் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளபோதும் பணயக் கைதிகளை ராணுவத்தால் மீட்க முடியவில்லை.

உள்ளூர் மக்களின் ஆதரவு தீவிரவாதிகளுக்கு பெருமளவில் கிடைப்பதாலும் மோசமான வானிலை மற்றும் கரடுமுரடான பாதைகள் என்பவற்றாலும் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முக்கிய பகுதிகளுக்குள் ராணுவத்தால் நுழைய முடியவில்லை என்று கூறப்படுகின்றது.

பிலிப்பைன்ஸ ராணுவம் பணயக் கைதிகளை மீட்கும் நடவ்டிக்கையைத் தொடங்கி 10நாள்கள் ஆகிவிட்ட நிலையில், இதுமேலும் பல நாள்களுக்கு முடிவின்றித் தொடரக்கூடும் என்று ராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேசமயம் ராணுவத்தால் தீவிரவாதிகள் அதிக எண்ணிக்கையில் கொல்லப்பட்டிருப்பதால் பணயக் கைதிகளின் உயிர்ப் பாதுகாப்புக் குறித்து அச்சம் எழுந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆனாலும தீவிரவாதிகளை முற்றாக அடக்கும்வரை ராணுவத் தாக்குதல்கள் தொடரும் என அரசு கூறியுள்ளதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன.

பிலிப்பைன்ஸின தெற்குப பகுதியில் பிரிவினை கோரிவரும் 'அபுசாயப்' முஸ்லீம் தீவிரவாதிகள் மீது பிலிப்பைன்ஸ் அரசு பாரிய அளவில் மேற்கொண்டுள்ள முதலாவது ராணுவ நடவடிக்கை இதுவாகும். (ஒ)



ஆசிய நாட்டு அரசியல் கட்சிகளின் முதலாவது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மணிலாவிற்கு வந்திருந்த பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவுக்கு, பிலிப்பைன்ஸ் முன்னாள் அதிபர் கொராஸோனா அகினோ தமது நாட்டின் பாரம்பரியக் கலைப்பொருளான மூங்கில் விசிறி ஒன்றைப் பரிசளித்தபோது எடுக்கப்பட்ட படம்.

ஆசிய நாட்டு அரசியல் கட்சிகளின் மாநாட்டில் ஆசிய நாடாளுமன்றம் மற்றும் ஆசிய நாணய நிதியம் ஆகியவற்றை உருவாக்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

# ஈராக் மீதான ஐ.நா. தடைகள் குறித்து இந்திய அரசு கவலை!

பாக்தாக்,செப்.26

ஈராக் மீதான ஐ.நாவின் தடைகளால் ஏற்பட்டுள்ள மனிதாபிமான விளைவுகள் குறித்து இந்தியா கவலை தெரிவித்துள்ளதுடன், ஈராக் மக்களுக்கு உதவ ஆர்வமாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

கடந்த 3நாள்களாக ஈராக்கில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் அஜித்குமார் பாஞ்சா செய்தியாளர்களிடம் இவற்றைத் தெரிவித்தார்.

உணவு மற்றும் அத்தியாவசியத் தேவைகளுக்காக மசகுஎண்ணெயை விற்க ஐ.நா. அனுமதி அளித்திருப்பது ஈராக்கை மறுசீரமைக்க உதவும் என்றும் -

அந்த நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கான பங்களிப்பை அதிகரிக்க இந்தியா ஆர்வம கொண்டிருப்பதாகவும் பாஞ்சா மேலும் தெரிவித்தார்.

முன்னதாக இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் கடிதத்தை அதிபர் சதாம ஹூசைனிடம அவர் கையளித்திருந்தார்.

பாஞ்சாவின் விஜயத்தின்போது இந்தியாவில இருந்து 5 லட்சம தொன் கோதுமைக்காக ஈராக் எண்ணெயை விற்கும் ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

குவைத்தை ஆக்கிரமித்தபோது ஈராக்மீது ஐ.நா பொருளாதார தடைகளை விதித்திருந்தது. அத்தியாவசிய தேவைகளுக்காக எண்ணெயை விற்க மட்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இந்தியாவில் வாழும் இஸ்லாமியர்களிடம் செல்வாக்கை அதிகரிக்க , ஆளும் பாரதீய ஜனதா அரசு முஸ்லிம் நாடான ஈராக்கடன் உறவுகளை வலுப்படுத்துவதாகக் கருதப்படுகிறது. (ஒ-8)

## வெளிநாட்டவரை குறைக்கும் திட்டம் சுவிஸில் நிராகரிப்பு

சூரிச்,செப்.26.

சுவிற்ஸர்லாந்தில் வெளிநாட்டவரின் எண்ணிக்கையை குறைப்பது குறித்த. திட்டத்தை அந்நாட்டு மக்கள் நிராகரித்தனர்.

இது தொடர்பாக நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பில 63சதவீதமான சுவிஸ நாட்டினா இந்தத திட்டத்துக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

சுவிற்ஸர்லாந்தில் சனத்தொகை 72 இலட்சமாகும். இதில் சுமாா 14 லட்சம்போ வெளிநாட்டினர். மொத்த சனத்தொகையில் இது 19.3 சதவீதமாகும். இதனை 18 சதவீதமாகக் குறைப்பது குறித்து கருத்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இத்திட்டத்தை நிராகரிக்குமாறு சுவிஸ் அமைச்சரவை வாக்காளரை வலியுறுத்தியிருந்தபோதும், வலது சாரிகளான சுவிஸ் மக்கள் கட்சி மட்டும் திட்டத்தை ஆதரித்திருந்தது.

முரட்டுத்தனமான சில வெளிநாட்டு ஆண்களால் வீதிகளில் சுவிஸ் பெண்கள இம்சைக்குள்ளாக்கப்படுவதாக குற்றச்சாட்டுக்கள எழுந்ததால், பெண்களின ஆதரவு இந்தத் திட்டத்துக்குக் கிடைக்குமென்று கருதப்பட்டது.

ஆனால் சுவிஸ் மக்கள் வெளிநாட்டவின எண்ணிக்கையை குறைக்கும் திட்டத்தை பெரும்பான்மையாக நிராகரித்துள்ளனர். (ஒ-4)

# சிதம்பரத்தைக் கட்சியில் சேர்க்க தமிழக பா.ஜ.கவில் கடும் எதிர்ப்பு!

சென்னை,செப்.26

இந்தியாவின் முன்னாள் நிதியமைச்சரும், த.மா.கா. தலைவர்களில் ஒருவருமான ப.சிதம்பரம பாரதீய ஜனதாக் கட்சியில் சேர, தமிழக பா.ஜ.கவினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அக்கட்சியின் தமிழகப் பிரிவின் செயலாளர்களான இல.கணேசன் மற்றும் ராஜா ஆகியோர் எதிர்ப்புக குறித்து செய்தியாளரிடம் பேசுகையில்:-

ப.சிதம்பரத்தைக கட்சியில சேர்த்தால் பாரதீய ஜனதாவின் தனித்தன்மை பாதிப்படையும் என்று தெரிவித்தனர்.

தமிழ்நாடு பாரதிய ஜனதாவுக்குத் திறமை வாய்ந்த தலைவர்கள் தேவைப்படுவதால் ப.சிதம்பரம் தமது கட்சியில சேரவேண்டும என்று பா.ஜ.கவின் மூத்த தலைவர்களில் ஒருவரான மாத்தூர் கூறியிருப்பது குறித்துக் கேட்கப்பட்டபோது -

இது தமிழக பாரதீய ஜனதாக் கட்சியினரை அவமானப்படுத்துவதாக உள்ள தென்றும -



ப.சிதம்பரம்

ப.சிதம்பரத்தைகட்சியில் சேர்க்கக் கூடாதென்று தொண்டர்கள் அனுப்பிய தந்திகள் தமிழக பா.ஜ.க. அலுவலகத்தில குவிந்துள்ளதாகவும். இல.கணேசனும், ராஜாவும தெரிவித்தனர்.

த.மா.காவிலிருந்து பாரதீய ஜனதாவிற்கு கட்சிமாற ப.சிதம்பரம் ஆலோசித்து வருவதாகவும்-

காங்கிரஸிலிருந்து பாரதீய ஜனதாவுக்குச் சென்ற மறைந்த ரங்கராஜன் குமாரமங்கலத்துக்குக கிடைத்திருந்த அங்கீகாரம் சிதம்பரத்துக்கு இத்தகைய எண்ணத்தை உருவாக்கியிருப்பதாகவும் கூறப்படுகிறது. (ஒ-8)

ராஜ்குமார் கடத்தல் விவகாரம்;

# கர்நாடகா மீது நீதிமன்றத்தில் தமிழக அரசு குற்றச்சாட்டு!

புதுடில்லி,செப்.26

கன்னட நடிகர் ராஜ்குமார் சந்தனக் கடத்தல்காரன் வீரப்பனால் கடத்தப்பட்ட விவகாரத்தில் கர்நாடக அரசு மீது உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

வீரப்பனின் நிபந்தனைகளில் குறிப்பிட்டிருந்த 5தமிழ்த் தீவிரவாதிகளை தமிழகச் சிறையில் இருந்து விடுவிப்பதற்கு எதிராக வழக்கறிஞர் வதேரா என்பவர் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த பொது நல மனுவுக்குத் தமிழக அரசு சமர்ப்பித்தபதில் மனுவிலேயே கர்நாடக அரசுமீது குற்றம் சுமத்தியுள்ளது.

அந்தப் பதில் மனுவில் -

ஒரு வருடத்தின் முன்னரே வீரப்பனால் ராஜ்குமார் கடத்தப்படக் கூடும் என்று தமிழக அரசு கர்நாடகாவிற்குத் தெரிவித்திருந்ததாகவும்-

கடந்த ஜூலை மாதம் 30ஆம் திகதி தமிழக எல்லையில் உள்ள காசனூரில் ராஜ்குமார் தங்கியிருந்தது தமிழக அரசுக்குத் தெரிவிக்கப் படவில்லை என்றும் -

தெரிந்திருந்தால் வீரப்பனிடமிருந்து அவருக்குத் தமிழக அரசு தகுந்த பாதுகாப்பளித்திருக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீரப்பனால் ராஜ்குமார் கடத்தப்பட்ட பின்னர் தமிழக அரசு கர்நாடக அரசின் மேல் தவறிருப்பதாகக் கூறுவது இதுவே முதல்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

உலக அரங்கில்

## புதுச்சேரியில் புதிய கட்சி தொடக்கம்

த.மா.காவிலிருந்து விலகிய பாண்டிச்சேரியின பொதுப்பணித்துறை அமைச்சர் கண்ணன் புதிய கட்சி தொடங்கியுள்ளார்.

புதுவை மாநில காங்கிரஸ என்று பெயரிடப்பட்டுள்ள புதிய கட்சியில் த.மா.காவை விட்டு விலகி தனிக் குழுவாக இயங்கி வந்த 3சட்டசபை உறுப்பினர்களும் சேர்ந்துள்ளனர்.

புதுவையில் செல்வாக்குடைய கண்ணன் புதிய கட்சி தொடங்கியதால் த.மா.காவின் எதிர்காலம் கேள்விக்குறியாக! உள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ஒ-8)

அரசமைப்பை மாற்றும் முயற்சி;

# பாகிஸ்தானின் இராணுவ அரசுக்கு சட்டத்தரணிகள் சங்கம் எதிர்ப்பு!

இஸ்லாமாபாத்,செப்.26

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளுக்கு உச்ச நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இதனால் நீதித்துறைக்கும், ஆட்சியாளர்களுக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியுள்ளது.

அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசமைப்பைத திருத்தும் இராணுவ அரசின் முயற்சி, நீதித்துறையின் செயற்பாட்டில் குறுக்கிடும் செயல் என்றும் -

இதனை அனுமதிக்கப் போவதில்லை என்றும் -

நீதித்துறையில் செல்வாக்குப் பெற்ற உச்சநீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் கூறியுள்ளது.

அத்துடன அரசமைப்புத திருத்தம் இராணுவ அரசின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட செயல் என்றும அது கண்டித்துள்ளது.

முன்னாள் பிரதமர்களான பெனாஸிர் பூட்டோ, நவாஸ் ஷெரீப ஆகியோரின் அரசியல வாழ்க்கைகளை முடக்குவதற்காக அரசியல கட்சிகள் தொடர்பான அரசமைப்பு விதிகளை மாற்ற இராணுவ ஆட்சியாளர்கள் முயற்சிப்பதாகப் பாகிஸ்தானில் எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வரும நிலையில், சட்டத்தரணிகளின் எதிர்ப்பு கவனத்தை ஈர்த்துள்ளது. (ஒ-8)

கொத்தடிமைகளாக இருந்த

# 25 குழந்தைத் தொழிலாளர்கள் தமிழக தொழிற்சாலைகளில் மீட்பு!

சென்னை,செப்.26

தமிழ்நாட்டின் விருதுநகர் மாவட்டத்தில் 8தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் கொத்தடிமைகளாக சிக்கியிருந்த 25 குழந்தைத் தொழிலாளர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் நடவடிக்கையால் மீட்கப்பட்டுள்ள னர்.

மீட்கப்பட்டவர்கள் அனைவரும் 15 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர். இவர்களின் பெற்றோர்கள் தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலை பார்த்த சமயத்தில் நிர்வாகங்களிடம் சிறுதொகைப்பணத்தைக் கடனாகப் பெற்றிருந்ததாகவும் -

அவர்கள் வேலைக்குச் செல்ல முடியாத சூழ்நிலையில் இவர்களின் சிறுவயதுப்பிள்ளைகளை அடிமைகளாகத் தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்தியதாகவும் கூறப்படுகிறது.

பெற்றோர் வாங்கிய சிறு தொகைக் கடனுக்கு வட்டிக்குமேல் வட்டியாகக் கூட்டி சிறுவர்களை அதிகநாள்கள் வேலைக்கு வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.(ஒ-8)

## நன்றி கூறுகின்றோம்

சாவல்கட்டு அந்திக்குளி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்துக்கு பொது மக்கள் உதவியால் மணி செய்யப்பட்டு பணப்பற்றாக்குறை காரணமாக இடை நிறுத்தப்பட்டிருந்த வேலையைப் பூர்த்தி செய்யும் முகமாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) தலைவரும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு கே.என்.டக்ளஸ் தேவானந்தா, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வீ. கே. குகேந்திரன் (ஜெகன்) அவர்களின் அனுசரணையுடன் மானிப்பாய் பிரதேச சபைத் தலைவரும், மானிப்பாய் தொகுதி அமைப்பாளருமான திரு. வே. அ. ஜோன்சன் அவர்களிடம் ரூபா 40 ஆயிரம் காசோலை வழங்கப்பட்டு சாவல்கட்டு ஆலய நிர்வாகத் தலைவர் திரு கு. ஜெயசிங்கம் அவர்களிடம் மக்கள் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டது. இவர்களை சாவல்கட்டு மக்கள் சார்பில் வாழ்த்தி நன்றி கூறுகின்றோம்.

நிர்வாக சபை,
அந்திக்குளி ஸ்ரீஞானவைரவர் ஆலயம்.
(78762)

## கண்ணீர் அஞ்சலி

ஊரெழு கிழக்கு ஞானவைரவர் ஆலயத்தின்
முன்னாள் தலைவர்
வ. தருமதுரை
அவர்களின் அன்பு மகள்

### ம. தர்மேஸ்வரி

அவர்களின் மரணச் செய்தி அறிந்து நாம் அதிர்ச்சி அடைந்துள்ளோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது அழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பரிபாலன சபை,
ஊரெழு கிழக்கு
ஞான வைரவர் ஆலயம்.
(87768)

## கண்ணீர் அஞ்சலி

ஊரெழு கிழக்கு
வளர்பிறை சனசமூக நிலையத்தின்
நிர்வாகசபை உறுப்பினர்
திரு. வ. தருமதுரை
அவர்களின் அன்பு மகள்

### ம. தர்மேஸ்வரி

அவர்கள் காலமாகிய செய்தியறிந்து ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளோம். அன்னாரின் பிரிவால் துயருறும், குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகசபை,
வளர்பிறை சனசமூக நிலையம்,
ஊரெழு.
(78769)

## கண்ணீர் அஞ்சலி

எமது சபையின் சக ஊழியர்
திரு. சி. சிறிஸ்கந்தராசா
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி தங்கச்சிப்பிள்ளை சின்னமணி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை, மல்லாகம்.
(சி/13073)

## கண்ணீர் அஞ்சலி

எமது மயிலிட்டி உப அலுவலக சக ஊழியர்
திரு. சி. சிறிஸ்கந்தராசா
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி தங்கச்சிப்பிள்ளை சின்னமணி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
உப அலுவலகம், மயிலிட்டி, மல்லாகம்.
(78771)

## கணனிப்பயிற்சிக்கு 25 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், செப். 26

நல்லூர் லயன்ஸ் கழகம் இலவசமாக நடத்த உள்ள கணனிப் பயிற்சி நெறிக்கு 25 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட இவர்கள் தமது பெயர்ப் பட்டியலை இலக்கம் 374, பருத்தித்துறை வீதியில் உள்ள (கல்வியங்காடு சந்தை அருகே) அகதிகள் புனர்வாழ்வுக் கழக அலுவலகத்தில் அல்லது அதற்கு முன்பாக உள்ள ராஜா கொமினிக்கேஷனில் பார்வையிடலாம் என்று நல்லூர் லயன்ஸ் கழகச் செயலாளர் லயன் இ.இராஜகுலேந்திரன் அறிவித்துள்ளார்.

இவர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை புதன் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். மணிக்கூட்டு வீதியில் உள்ள ஐ எஸ். எஸ். கணனிக் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

காரைநகர் செப். 26

ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறும்.

(இ-73)

## பெண் சாரணிய வழிகாட்டுநர் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், செப். 26

பெண் சாரணிய வழிகாட்டுநர்களுக்கான பயிற்சி வகுப்பு எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் இரண்டு தினங்களுக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் காலை 8.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள பயிற்சிக்கான வழிகாட்டுநர்கள் இந்தப் பயிற்சியின்போது தெரிவு செய்யப்படுவர் எனவும் —

சிரேஷ்ட சாரணியர்கள் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை இந்து மகளிர் கல்லூரியில் சமுகமளிக்கவேண்டும் எனவும் —

மாவட்ட சாரணிய ஆணையாளர் கேட்டுள்ளார்

(இ-7)

## மீன் பிடிக்க மீண்டும் அனுமதி

குருநகர், செப். 26

குருநகர் கடலில் மீன்பிடிப்பதற்கு நேற்று முதல் படையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் இப்பகுதிக்கடலில் மீன் பிடிக்கச் செல்ல மீனவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. ஆறுநாள் இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

(இ-51-173)

## வேலையற்றோர் விவரம் சேகரிப்பு

வலி. வடக்கு, செப். 26

வேலையற்று இருக்கும் இளைஞர், யுவதிகள் பற்றிய விவரங்கள் 513 ஆவது படையணியினரால் சேகரிக்கப்பட்டுவருகின்றன.

வேலையற்று இருப்பவர்களின் விவரங்களையும் மற்றும் அவர்களின் கல்வித்தகைமை போன்ற விவரங்களையும் தரும்படி பிரதேச செயலகங்கள் கேட்கப்பட்டுள்ளன.

கிராம அலுவலர்கள் மூலம் இவ்விவரங்கள் சேகரிக்கப்பட்டுவருகின்றன.

(ஐ—86)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர்

### வீரசிங்கம் உதயகுமார்

அவர்களின் திடீர் மறைவையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.
புனித அந்தோனியார் கல்லூரி,
ஊர்காவற்றுறை.
(78774)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
திரு. பொன்னையா துரைராசா
(சிரேஷ்ட படவரைஞர்)
அவர்களின் அன்புத் தந்தையார்

### அமரர் சின்னையா பொன்னையா

(அனலைதீவு)

அவர்கள் 20—09—2000 அன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிராந்திய உள்ளூராட்சி
உதவி ஆணையாளரும்,
சக உத்தியோகத்தர்களும்.
இல. 29, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(78767)

## மரண அறிவித்தல்கள்

### குட்டிப்பிள்ளை சந்திரசேகரம்பிள்ளை

பண்டகை, உடுப்பிட்டியைச் சேர்ந்த குட்டிப்பிள்ளை சந்திரசேகரம்பிள்ளை அவர்கள் நேற்று (25-09-2000) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் குட்டிப்பிள்ளை - மாணிக்கம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, தங்கம்மா, செல்லம்மா, ஆறுமுகம் (அதிபர்), குமார் (பொலீஸ் அதிகாரி), இரத்தினம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வச்சந்திரன் (அதிபர், யா/ எழுதுமட்டுவாள் அ.த.க. பாடசாலை), தேவரஞ்சனா, காலஞ்சென்ற ஸ்ரீராமச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கமலம் (படித்த மகளிர் திட்டம், மிருசுவில்), மகாதேவன் (ஆசிரியர், யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுயந்தன் (யாழ் இந்துக்கல்லூரி) சுஜீவன் (யா/ சென். ஜோன்ஸ் கல்லூரி), அசோக்குமார் (யா/தொழில்நுட்பக் கல்லூரி), யசோதினி (யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26-9-2000) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11 மணியளவில் வல்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்;
ச. செல்வச்சந்திரன்
(மகன்)
பண்டகை,
உடுப்பிட்டி,
வல்வெட்டித்துறை.
(சி/13076)

### மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

(அப்புத்துரை)

சுருவிலைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை 22-9-2000 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை—ஆரோக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் றோசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற யோசப் (லக்கி) மற்றும் பிறிஜற், காலஞ்சென்ற ஆசீர்வாதம், மேரித்திரேஸ் ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஜெயசீலி, அருள்சீலி, மனோசீலி, பீற்றர், செல்வராணி, புஸ்பராணி, தயாராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சறோஜினிதேவி, இராசரத்தினம், அமரர் வசந்தகுமார் (அப்பு வாத்தியார்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று (25-09-2000) கனடாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
திருமதி மே. தி. வசந்தகுமார்
71/9, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.
(78777)

உதயன்

## குந்தகம் செய்யாதீர்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு இன்னும் இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இது குறித்துச் சுகாதார அமைச்சுக்கு எடுத்துச் சொல்லியும் அதனை வழங்குவதற்கு இன்னும் நடவடிக்கை இல்லை.

ஏனைய பிரதேசங்களைப் போலன்றி, போர் நடைபெறும் வடக்கிலும் கிழக்கிலும் பணியாளர்கள் எல்லோருமே இடர்கள் - ஆபத்துகளின் - மத்தியிலேயே தமது வேலைகளை - மக்களுக்குரிய சேவைகளை - செய்கின்றனர்.

இந்தக் கஷ்ட நிலையைச் சுட்டிக்காட்டி வடக்கு - கிழக்கில் பணிபுரியும் அரசாங்க ஊழியர்கள் தமக்கு இடர்காலக் கொடுப்பனவு வழங்க வேண்டும் என்று விடுத்த கோரிக்கையை அரசு ஏற்றுக் கொண்டு அதனை வழங்கச் சம்மதித்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த அரச ஊழியர்களுக்கு, 1996ஆம் ஆண்டில் சிவில் நிர்வாகம் ஆரம்பித்த காலத்தில் இருந்து இரண்டு வருடங்களுக்கே இடர்காலக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று அரசு முதலில் அறிவித்தது.

எனினும், தொழிற்சங்கங்கள் பலவற்றின் வற்புறுத்தலின் பேரில் இடர்காலக் கொடுப்பனவை வழங்கும் காலம் 1999 டிசம்பர் மாதம் வரை நீடிக்கப்பட்டது. அதற்கான பணிப்புரை திறைசேரிக்கு வழங்கப்பட்ட போதிலும், மிகவும் இழுத்தடித்தே ஏனைய அரச ஊழியர்களுக்கு அந்தப் பணம் கைக்குக் கிடைத்தது.

எனினும் -

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி வடக்கு - கிழக்கு மாகாணம் முழுவதிலும் பணியாற்றும் வைத்தியர்களுக்குக் கடந்த வருடத்தின் கடைசி ஆறு மாதங்களுக்கும் உரிய இடர்காலக் கொடுப்பனவு இன்னும் வழங்கப்படவில்லை.

இந்த இடர்காலக் கொடுப்பனவை வழங்குவதாகச் சுகாதார அமைச்சு உறுதி அளித்திருந்தது. இந்த வருடத்தில் எட்டு மாதங்கள் கடந்தும் - மொத்தம் 14 மாதங்கள் கழிந்தும் - வைத்தியர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவு இன்னும் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக மருத்துவ அதிகாரிகள் சங்கப் பிரதிநிதிகள் கடந்த வெள்ளிக்கிழமை சுகாதார அமைச்சின் புதிய செயலாளரைச் சந்தித்து எடுத்துரைத்தனர். இடர்காலக் கொடுப்பனவை வழங்குவதற்குத் தமக்கு ஐந்து நாள் அவகாசம் தருமாறு புதிய செயலாளர் கேட்டிருந்தார்.

குறிப்பிட்ட ஐந்து நாள் அவகாசத்திற்குள் வடக்கு- கிழக்கு மருத்துவர்களுக்கு நிலுவையாக உள்ள இடர்காலக் கொடுப்பனவை வழங்காவிடில், நாடு முழுவதிலும் பணியாற்றும் சங்கத்தின் உறுப்பினர்கள் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடுவர் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே, வடக்கு - கிழக்கில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் பொதுவாகவே போதிய டாக்டர்கள் சேவையில் இல்லை. அதனால் இப்பகுதிகளில் பணியாற்றும் வைத்தியர்கள் மிகுந்த சிரமங்களுடனேயே தமது சேவையைச் செய்து வருகின்றனர். அவர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டால் இப்பிரதேசங்களில் மருத்துவ சேவை பெரியளவில் பாதிக்கப்படும்; குன்றிவிடும்.

டாக்டர்கள் வேலைநிறுத்தம் செய்யும் பட்சத்தில் நாட்டில் உள்ள ஏனைய ஆஸ்பத்திரிகளிலும் நோயாளர்கள் பாதிக்கப்படுவர்.

தேர்தல் காலத்தில் இந்தக் கோரிக்கையை முன்வைத்தால் காரியமாகும் என்ற நோக்கத்துடன் தொழிற்சங்க நடவடிக்கை குறித்துத் தாம் பிரஸ்தாபிக்கவில்லை என்று மருத்துவ அதிகாரிகள் சங்கத் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

ஏனையோருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவை வைத்தியர்களுக்குக் கொடுப்பதற்கு வீண் தாமதம் செய்வது எந்த வகையிலும் ஏற்கக் கூடியதல்ல. இதுவரை இதுவிடயத்தில் அசமந்தம் காட்டியமை கண்டிக்கத்தக்கது. வைத்தியர்களின் சேவையின் மகத்துவத்தை, இன்றியமையாமையை உணர்ந்து கொடுப்பனவை உடனடியாக வழங்க வேண்டும். அவர்களைத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வைத்து நோயாளருக்குரிய சேவைக்குக் குந்தகம் விளைவிக்கலாகாது.

# கிராம அலுவலர்கள் கடமைநேரத்தில் உயிரிழந்தால் பதவி, சம்பள உயர்வு

## மாநாட்டில் கோரிக்கை

கொழும்பு,செப்.26

வடக்கு - கிழக்கு பகுதிகளில் கிராம உத்தியோகத்தர்கள் கடமை நேரத்தில் உயிரிழந்தால் அவர்களுக்குப் பொலிஸாரைப் போல் பதவி உயர்வு, சம்பள உயர்வு என்பன வழங்கப்பட வேண்டும்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு லில்லியன ஹொட்டலில நடைபெற்ற அரசசேவைகள் கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளையின் ஐந்தாவது வருடாந்த மாநாட்டில் இவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நேரடியாக கிராம உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு, சேவை நீடிப்பு என்பன வழங்கப்படுவது போல சகலருக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் -

கிராம உத்தியோகத்தர்களாக உள்ள பட்டதாரிகளுக்கு விசேட சம்பளமும் பதவி உயர்வும் வழங்கப்பட வேண்டும் என்றும் -

அந்த மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ஐ-8)

## சுவரொட்டிகள் அகற்றப்பட்டன

தென்மராட்சி,செப்.26

நெல்லியடிப் பகுதியில் கட்சிகளினால் வீதியோர மதில்களில் ஒட்டப்பட்டிருந்த தேர்தல் பிரசார சுவரொட்டிகள் நேற்றுமுன்தினம் பொலீஸாரால் அகற்றப்பட்டன. (ஐ-117)

## பாடசாலை உபகரணங்கள்

நெல்லியடி,செப்.26

வடமராட்சி கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியின் ஏனைய பகுதிகளில் கல்வி கற்கும் வசதிகுறைந்த மாணவர்களுக்கு இன்பர்சிட்டி ஞானியார் கல்விக் கழகத்தினால் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே இத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமக்குரிய 2 ஆம் கட்டக் கொடுப்பனவை பருத்தித்துறை பன்னக்கட்டையில் உள்ள, ஞானியார் கல்விக் கழகத தலைவர் வேநவரத்தினராசாவிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-109)

## கண்ணீர் மட்டும் காணிக்கையா?

மறப்போரும் புரிந்தனைநீ மாண்புமிகும் ஆயுதங்கள்
கறப்போரின் கருத்தினிலே கையளித்து விட்டதன்பின்
அறப்போருந் தான்புரிந்து அகிலத்து நாயகனாய்
உறக்கண்டோம் உன்றனுக்கு ஒருவன்நீ தானுவமை

தண்ணீரும் உண்ணாது தனித்துவமாய்த் திலீபா நீ!
உண்ணா விரதமது உவந்தனையே உயர்வாக
கண்ணீரை மட்டும்நாம் காணிக்கை ஆக்குவதா?
எண்ணிய உனதெண்ணம் ஈடேறத் துடிக்கின்றோம்.

- புதுவைக் கவிஞன்

(உண்ணாவிரதமிருந்து உயிர்நீத்த தியாகி திலீபனின் 13ஆவது நினைவு தினம் இன்றாகும்)



உரும்பிராயில் புதிதாக அமைக்கப்பட்ட மத்திய சந்தை கடந்த மாத இறுதியில் திறந்து வைக்கப்பட்டது. சந்தையின் பெயர்ப்பலகையை வலி.கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் பூ.குணசிங்கம் திரைநீக்கம் செய்து வைப்பதை முதல் படத்திலும், சந்தைக் கட்டடத்தை கோப்பாய் பிரதேச செயலாளர் க.கேதீஸ்வரன் திறந்து வைப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (ஐ)

# கால் நூற்றாண்டு காலம் சமயத் தொண்டாற்றியவர்

## மணிவாசகர் சபைத் தலைவருக்கு அஞ்சலி

காரைநகர்,செப்.26

கால் நூற்றாண்டுக்கு மேலாக காரைநகர் மணிவாசகர் சபையின் உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்து தமிழிற்கும் சைவத்துக்கும் தொண்டாற்றிய காரைநகர் ஈன்றெடுத்த அருந்தவப் புதல்வனை இழந்துவிட்டோம்.

கடந்த புதன்கிழமை கொழும்பில் சிவபதமடைந்த காரைநகர் மணிவாசகர் சபையின் தலைவரும், காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய முன்னாள் அதிபரும் ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளருமாகிய எஸ்.ஆர். எஸ்.தேவதாசனின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் அஞ்சலி உரை நிகழ்த்திய காரைநகர் மணிவாசகர் சபையின் இணைச்செயலாளர் நா. தர்மையா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் வித்தியாலய அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நினைவஞ்சலிக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. அங்கு அஞ்சலி உரை நிகழ்த்திய மணிவாசகர் சபையின் இணைச் செயலாளர் தொடர்ந்து கூறுகையில்:-

காரைநகரில் தற்போது வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் உயர்ந்த கல்விமானாயும், சிறந்த ஆன்மீகப் பற்றுள்ளவராகவும் சமூக, சமயப் பணிகளில் தவறாது ஈடுபட்டு வந்தவர் அமரர் எஸ்.தேவதாசன் எனக் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை தனது அஞ்சலி உரையில் -

பல ஆண்டுகளாக சைவத்துக்கும், தமிழுக்கும் அருந்தொண்டாற்றியவர். தனக்கென வாழாப் பிறர்க்கென வாழும் பெருந்தகை; பழகுவதற்கு இனிய குழந்தை உள்ளம் நிறைந்தவர்.காரைநகா சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் ஆசிரியராகவும் அதிபராகவும் இருந்து கல்விப்பணி செய்து வந்தவர் -

காரைநகர் மணிவாசகர் சபையில் கால் நூற்றாண்டுக்கு மேலாக உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்து தொண்டாற்றியவர். 'தில்லைக் கூத்தன்' என்ற நூல் உட்பட பல ஆக்கங்களை வெளியிட்டதோடு பத்திரிகைகளிலும் தனது எழுத்தாற்றலை வெளிப்படுத்தி வந்தவர். அவரின் மறைவு எமக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து காரைநகர் பிரஜைகள் குழுத் தலைவர் கே.கந்தையா, ஆசிரியர் ந.கணேசமூர்த்தி உட்படப் பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். (ஐ-73-28)

### நாளை

புரட்டாதி 11

புதன்கிழமை

*திதி:* அமாவாசை பின் இரவு 1.57 வரை

*நட்சத்திரம்:* உத்தரம் பின்னிரவு 12.37 வரை

அமாவாசை விரதம்

மஹாளய பட்ச முடிவு

*சுபநேரம்:* 4.32 - 6.02

*ராகுகாலம்:* 12.02 - 1.32

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## இறப்பதற்கு இரு வாரங்களுக்கு முன்

# தந்தையை அடக்கம் செய்த இடத்துக்கு சென்று புற்களை அகற்றினார் அஷ்ரப்!

கொழும்பு,செப்.26

அமைச்சா அஷ்ரப் மரணிப்பதற்கு முன்னர் சுமார் இருவார காலமாக அவரது நடவடிக்கைகள் விசித்திரமானவையாக இருந்தன. கடைசியாக ஜூவத்தை பள்ளிவாசல மையவாடியில் சென்றுதனது தந்தை அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் புல் பூண்டுகளை அகற்றிக் கொண்டிருந்தார்.

சமூக சேவைகள பிரதி அமைச்சா யூ.எல்.எம். முஹைதீன இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

அக்கரைப்பற்றில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய போதே பிரதி அமைச்சா இதனைத் தெரிவித்தார். அம்பாறை மாவட்ட கரையோரச் செய்தியாளர்களுக்கு மறைந்த அமைச்சர் அஷ்ரப் ஏற்கனவே அன்பளிப்புச் செய்திருந்த பொருள்களை இந்த வைபவத்தில் பிரதி அமைச்சா முஹைதீன் வழங்கினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

மரணிப்பதற்கு 2வார காலத்திற்குள் அவரின நடவடிக்கைகள விசித்திரமானவைகளாக இருந்தன. கூட்டங்களில் 20 நிமிடங்கள் அல்லது 30 நிமிடங்கள் பேசுகிறேன் என்று கூறுவார் ஆனால் 2 மணித்தியாலங்கள் 3 மணித்தியாலங்கள் பேசிக் கொண்டு செல்வார். அவரின் பேச்சுக்களில் எனக்கு விருப்பம் இல்லாத நிலைதோன்றும். அதை முறையாகத் தெரிவித்தும் வந்தேன்.

கடைசியாக அவர் ஜாவத்தை பள்ளிவாசல் மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டுள்ள தனது தகப்பனாரின் அடக்கஸ்தலத்திற்குச் சென்று அவ்விடத்தில் வளர்ந்திருந்த புற்களை தனது இரண்டு கைகளாலும் குந்திக் கொண்டு பிடுங்கத் தொடங்கினார். இதனைக் கண்டு அவரின பாதுகாவலர்களும் பிடுங்க முனைந்தபோது அதைத் தடுத்து அவராகவே அதைப் பிடுங்கித் துப்புரவு செய்தார்.

கடைசியாக நான் அடக்கப்பட வேண்டிய இடத்தைக கண்டுபிடித்து விட்டேன் என்றும கூறினார். இவரின் இழப்பு முஸ்லிம் சமுதாயத்திற்கு குறிப்பாக தமிழ்பேசும் இனத்திற்கு பேரிழப்பாகும் - என்றார். (ஐ-4)

# அரச பதவிகளில் உள்ளோர் உயர் கல்வி பெற வசதி

தென்மராட்சி,செப்.26

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள திணைக்களங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது தொழிலுடன் தொடர்புடைய உயர்கல்வியினைப் பெற்றுக்கொள்வதற்கான செயல்திட்டத்தினை வடக்கு-கிழக்கு மாகாணசபை நடைமுறைப்படுத்த உள்ளது.

தற்போது கடமைபுரியும தொழிலில் மூன்று வருட சேவையைப் பூர்த்தி செய்து பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட 45 வயதுக்கு உட்பட்ட உத்தியோகத்தர்கள் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் உயர் கல்வியினைப் பெறமுடியும்.

உத்தியோகத்தர் கற்கவுள்ள கற்கை நெறிக்கான கட்டணம், பதிவுக் கட்டணம், பயிற்சிக் கட்டணம ஆகியவை அந்தந்த நிறுவனத்திற்கு வழங்கப்படும் பிரமாண அடிப்படையிலானமூலதன நன்கொடை நிதியிலிருந்து அறவிடப்படும்.

உயர்கல்வி பெறவுள்ள உத்தியோகத்தர்கள தாம தொடரவிருக்கும் கற்கைநெறி தொடர்பாக புலமைப் பரிசில்சபையுடன ஒப்பந்தம (பிணை முறி) செய்து கொள்ளல் வேண்டுமெனவும், ஒப்பந்தப் பிரகாரம் பயிற்சி முடிந்து ஐந்து வருடகாலத்திற்கு சேவையிலிருந்து விலகாமல் பணிபுரிய வேண்டுமெனவும் வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளரினால் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

### உதயவாக்கு

குடிகளின் கூட்டுறவு இல்லாத வரை அரசனால் எதுவும் ஆக்க இயலாது. குடிமக்கள் அரசனை மாற்றும் ஆற்றலுடையவர்கள். அரசன் குடிமக்களை மாற்ற முடியாத நிலையுடையவன்.

- சுதர்சன்

# சில தொண்டு நிறுவனங்களும் வாக்களிப்பை கண்காணிக்கும்

## மட்டக்களப்பில் ஏற்பாடு

மட்டக்களப்பு,செப்.26

மட்டக்களப்பில பொதுத தேர்தல் வாக்களிப்பை அரச சார்பற்ற நிறுவனங்கள் கண்காணிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தேர்தல் நீதியாகவும சுதந்திரமாகவும நடைபெறுவதனை உறுதிப்படுத்தும் வகையில் வை.எம்.சி.ஏ., சுதந்திரமனித அபிவிருத்திக கழகம், சூரியா பெண்கள் அபிவிருத்தி மன்றம் போன்ற அமைப்புகளே இந்தத் தேர்தலைக் கண்காணிக்கவுள்ளன.

தேர்தலின்போது இடம்பெறும முறைகேடுகளைத் தவிர்ப்பதும், முறைப்பாடுகளைப் பதிவு செய்து ஆவணப்படுத்துவதும் இந்த அமைப்புகளின் முக்கிய பணிகளாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

# காலத்தால் அழியாத கவிவேந்தன்

ஒரு கவிஞன் கவிஞனாகவே பிறக்கின்றான், அவன் உருவாக்கப்படுவதில்லை. (A Poet is Born Not Made) என்பது ஒரு பிரபலமான முதுமொழி. இந்த வகையில் தமிழன்னையின் மடியில் கவிஞர்களாகவே பிறந்த பல புகழ் மிக்க கவிஞர்கள் உளர். அவர்களுள்ளே கவியரசு கண்ணதாசன் காலத்தால் அழியாத ஒருவர் என்பதற்கு அவரது தத்துவப் பாடல்கள் சான்று பகர்கின்றன.

உடலால் மறைந்துவிட்ட போதும் தனது தத்துவக் கருத்துக்களால் தரணி எங்கும் பாடல்களாய் நின்றொலிக்கின்றார் கவியரசு. சிந்தனைக்கு விருந்தளிக்கும் அவரது சில தத்துவங்களை சற்று இரைமீட்டுப் பார்ப்போம்.

*'வீடுவரை உறவு, வீதிவரை மனைவி,*
*காடுவரை பிள்ளை, கடைசிவரை யாரோ?'*

என்று வாழ்வின் நிலையற்ற தன்மையையும் உறவுகளின் அர்த்தமில்லாத் தொடர்புகளையும் அற்புதமாக எடுத்துரைக்கின்றார்.

*'பொருள் வேண்டித் திருடச் செல்வாய்*
*பெண்ணைப் பெறவேண்டி விளையைச் செய்வாய்*
*துணிவோடு உயிரைக் கொல்வாய்*
*எதற்கும் துணையாக மதுவைக் கொள்வாய்*
*கேட்டால் நான்தானே மனிதன் என்பாய்'*

என்ற வரிகள் மூலம் பஞ்சமா பாதகங்களில் மிகக் கொடியதும் தலையாயதும் மற்றைய நான்கு பாதகங்களையும் செய்யத் தூண்டுவதும் மது போதையே என்ற கருத்தினை பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வண்ணம் எளிய நடையில் எடுத்தியம்புகின்றார்.

*'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரோ கண்ணா'*

என்று, விதியின் வலிய கரங்களிலிருந்து எவ்வுயிரும் தப்பிவிடமுடியாது என்பதை ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றார் -

*'கடவுள் ஏன் கல்லானார் - மனம், கல்லாய்ப் போன மனிதர்களாலே'*

என்று இரக்கமும்மனிதாபிமானமும் மாந்தர் மனதைவிட்டு நீங்கும் போது இறைவன் கூட இறுகி இரும்பாகி விடுகின்றான் என்ற பேருண்மையை அற்புதமாகவும் அர்த்தபுஷ்டியாகவும் அழுத்திச் சொல்கிறார்.

*'வருந்தாதே மனமே - வீணே வருந்தாதே மனமே!*
*ஒருபோதும் அவனன்றி - ஓர், அணுவும் அசையாது'*

என்ற வரிகள் மூலம் வாழ்வின் இன்ப துன்பங்களால் கலங்கி நிற்கும் ஜீவன்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டி வாழ்க்கையை இன்ப மயமாக்க அறைகூவல் விடுக்கின்றார்.

*'கற்பாம் மானமாம் கண்ணகியாம் சீதையாம்*
*கடைத்தெருவில் விக்குதடா ஐயோ பாவம்*
*காசிருந்தால் வாங்கலாம் ஐயோ பாவம்'*

என்று விலை மதிக்கமுடியாத கற்பினை கடைச்சரக்காக்கி வெளியுலகிற்கு பத்தினி வேடம் போடும் பெண்குலத்திற்கு சாட்டையடி கொடுக்கின்றார்.

*'அண்ணன் என்னடா தம்பி என்னடா*
*அவசரமான உலகத்திலே'*

என்ற வரிகள் மூலம் வசதிகள் வாய்க்கும் போது உறவுகள் மறக்கப்படுகின்றன (Pain Is Forgotten When Gain Comes) என்ற உலகியல் பலவீனத்தையும் போலி உறவுகளையும் தத்ரூபமாகச் சித்திரிக்கின்றார்.

*'போனால் போகட்டும் போடா - இந்த*
*பூமியில் நிலையாய் வாழ்ந்தவர் யாரடா?'*

என்று இப்பூவுலகில் நிலையாமைப் பொருள்கள் மீது பற்று வைத்து அவை இழக்கப்படும்போது செய்வதறியாது தடுமாறி நிற்கும் மாந்தருக்கு நிலையாமை பற்றி தெளிவுபடுத்துகின்றார்.

*'ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு - ஒரு*
*கோலமயில் என் துணையிருப்பு - இசைப்*
*பாடலிலே என் உயிர்த் துடிப்பு - நான்*
*பார்ப்பதெல்லாம் அழகின் சிரிப்பு'*

என்ற வரிகள் மூலம், மது + மாது என்ற குறுகிய வட்டத்துக்குள் இருந்துகொண்டு சிந்தனை உணர்வுகளைத் தட்டி எழுப்பிக் கவி புனையவும் இயற்கை அழகை ரசிக்கவும் தன்னால் முடியுமென தனது நிலைப்பாட்டை எடுத்தியம்புகின்றார். இது அவரின் பலமா, பலவீனமா என்பதை வாசகர்கள் தீர்மானிப்பார்களாக. இக்கருத்துக்கள் பொதுப்படையாக ஏற்றுக்கொள்ள முடியாதவையாக இருக்கலாம்.



*'உள்ளம் என்பது ஆமை - அதில்*
*உண்மை என்பது ஊமை*
*சொல்லில் வருவது பாதி - நெஞ்சில்*
*தூங்கிக் கிடப்பது மீதி'*

உள்ளத்தில் பெருக்கெடுத்துப் பாயும் அனைத்து உணர்வுகளையும் வார்த்தையில் வெளிப்படுத்த முடியாமல் தவிக்கும் தன்மையை இவ்வாறு கோடிட்டுக் காட்டுகிறார்.

*'தெய்வம் என்றால் அது தெய்வம் - வெறும்*
*சிலையென்றால் அது சிலைதான்*
*உண்டென்றால் அது உண்டு*
*இல்லையென்றால் அது இல்லை'*

இறைவன் இருப்பதுவும் இல்லாததுவும் அவரவர் மனநம்பிக்கையின் வலிமையிலேயேதான் தங்கியுள்ளது என்பதை மேற்போந்த வரிகள் மூலம் செப்புகின்றார். சுவர்க்கத்தை நரகமாக்குவதும் நரகத்தைச் சுவர்க்கமாக்குவதும் மனித மனமே (Mind in its own Place markes a hell of meaven and a heaven of hell) என்பது ஒரு ஐரோப்பிய முதுமொழி.

*'உன்னையறிந்தால் நீ உன்னை அறிந்தால்*
*உலகத்தில் போராடலாம்*
*உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்*
*தலை வணங்காமல் நீ வாழலாம்'*

என்று தன்னம்பிக்கையின் வலிமையால் எதையும் சாதிக்கலாம் என்ற கருத்தை வலியுறுத்துகின்றார். உன்னையே நீ எண்ணிப்பார் (THINK OF YOURSELF) என்று கிரேக்கநாட்டு தத்துவமேதை சோக்கிரட்டீஸும் கூறியது இவ்விடத்தில் நோக்கற்பாலது.

*'இரண்டு மனம் வேண்டும் இறைவனிடம் கேட்டேன்*
*நினைத்துவாழ ஒன்று மறந்துவாழ ஒன்று'*

என்ற வரிகளால் காதல் தோல்வியால் ஏற்படும் பிரிவுத் துயரை உருக்கமாக வெளிப்படுத்துகின்றார்.

*'ஆண்டவன் ஒருநாள் கடை விரித்தான் - அதில்*
*ஆயிரம் ஆயிரம் பொருள் அமைத்தான்'*

என்று மாந்தரின் உலகியல் ஆசைகளையும் அளவு மீறிய ஆடம்பரங்களையும் கச்சிதமாக எடுத்துரைக்கின்றார்.

பின்பு,

*'எதையும் வாங்கிட மனிதர் வந்தார்*
*விலை என்னவென்றாலும் அவர் கொடுத்தார்*
*ஆனால் அன்பை வாங்கிட எவருமில்லை'*

என்கிறார்.

கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் (EVERY ONE IS WISE AFTER THE EVENT) என்ற முதுமொழிக்கிணங்க அவசரப் போக்கையும் அதனால் ஏற்படும் விளைவுகளை எண்ணி வேதனைப்படுவதையும் பின்வரும் வரிகள் மூலம் தெட்டத்தெளிவாகவும் கச்சிதமாகவும் விளக்குகின்றார்.

*'சட்டி சுட்டதடா கை விட்டதடா*
*புத்தி கெட்டதடா நெஞ்சைத் தொட்டதடா*
*நாலும் நடந்து முடிந்த பின்னே*
*நல்லது கெட்டது தெரிந்ததடா'*

இவ்வாறு தத்துவம் என்ற சாகரத்தில ஆழ மூழ்கி மூச்சடக்கி முத்துக்குளித்து அரியபல பொக்கிஷங்களை அள்ளிவந்து உலகின் பார்வைக்கு வைத்திருக்கும் கவியரசு கண்ணதாசனின் பாடல்களானது எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய இலக்கியப் பெறுமதி வாய்ந்தவையாகும். கவியுலகு இருக்கும்வரை அவரது பாடல்களும் அவர் புகழும் காலத்தால் அழியாது நிலைத்திருக்கும் என்பதில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களுக்கு இடமில்லை.

- யாழ். வதிரீவாசன்

## பரீட்சார்த்திகள் நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.26

யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மத்திய அரசு எழுதுவினைஞர் சேவைக்கான நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

மேற்படி பரீட்சைக்கு பரீட்சார்த்திகள் அனைவரையும் கொழும்புக்குச் சமுகமளிக்குமாறு அழைக்கப்பட்டிருந்ததையடுத்து தாம் பயணம் மேற்கொள்வதில் உள்ள சிரமங்கள் மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்து தரும்படி பரீட்சார்த்திகள் கேட்டிருந்தனர்.

அவர்களது வேண்டுகோளை ஏற்று மேற்படி பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு செய்து கொடுத்தமைக்காகவே ஈ.பி.டி.பி செயலாளருக்கு நன்றி தெரிவித்துள்ளனர். (ஜ-ரி)

## கணனிப் பயிற்சி நெறி

தென்மராட்சி,செப்.26

முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கணனிப் பயிற்சி நெறி உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் பயிற்சி பெற விரும்பும் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்கள் இணுவில் மத்திய கல்லூரியில் இயங்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு கல்லூரி அதிபர் இ.கைலைநாதன் அறிவித்துள்ளார். (ஜ-117)

## கச்சாய் மக்கள் திரும்புகின்றனர்

தென்மராட்சி,செப்.26

, வடமராட்சி பிரதேசத்தில் தங்கியிருந்த மீசாலை, கச்சாய், அல்லாரை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு நேற்றுமுன்தினம் திரும்பிச் சென்றதைக் காணமுடிந்தது. (ஜ-117)

## வீதி திருத்தம்

தென்மராட்சி,செப்.26

மிகவும்மோசமாகச் சேதமடைந்த நிலையில் காணப்பட்ட மந்திகை - கலிகை வீதி திருத்தப்பட்டு வருகின்றது. (ஜ-117)

# நெருக்கீடு என்றால் என்ன?

ஒரு புதிய சூழல் அல்லது பிரச்சினைக்கு முகங்கொடுக்கின்ற பொழுது எங்கள் உடலிலும் உள்ளத்திலும் ஏற்படுகின்ற மாறுதல்களே (எதிர் வினைகளே) நெருக்கீடாக உணரப்படுகிறது.

இது அன்றாடம் சிறிய அளவுகளிலே நாம் எல்லோரும் அனுபவிக்கும் ஒன்றுதான் எனினும், சில வகையான நெருக்கீடுகள் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தவல்லன. சாதாரண வாழ்வியல் அனுபவங்களுக்குள் வராத பேரழிவுகள், உயிரிழப்புகள், எதிர்பாராத வகையில் ஏற்படுகின்ற, எங்களது கட்டுப்பாட்டுக்குள் இல்லாத நெருக்கீடுகள் போன்றன பெரும்பாலானோரில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையாகக் காணப்படுகின்றன.

### போர்ச்சூழலில் நெருக்கீட்டை ஏற்படுத்துகின்ற காரணிகள்

- ★ சடுதியான அறிவிப்புகள்
- ★ இடம்பெயர்வு
- ★ அகதிவாழ்க்கை
- ★ நிச்சயமற்ற உணர்வு
- ★ மரணபயம்
- ★ காயங்கள்
- ★ உயிர், உடைமை இழப்புகள்
- ★ பேரழிவுகள்

### நெருக்கீட்டின் விளைவுகள்

#### மனவெளிப்பாடுகள்

- ★ மரத்துப்போன நிலை
- ★ ஏக்கம்
- ★ பயம்
- ★ வெட்கம்
- ★ கவலை
- ★ குற்றவுணர்வு
- ★ கோபம்
- ★ அவநம்பிக்கை

#### உடல் முறைப்பாடுகள்

பஞ்சி, இயலாமை, அலுப்புக் களைப்பு, உடல் எரிவு, நித்திரைக் குறைபாடு, பயங்கரக் கனாக்கள், தலையிடி, தலைச்சுற்று, தலை விறைப்பு, நெஞ்சுநோ, படபடப்பு, மூச்சுவிடுவதில் கஷ்டம், வயிறெரிவு, பொருமல், ஓங்காளம், பாலியல் உணர்வு குறைதல், கைகால் விறைப்பு, மூட்டுநோக்கள்.

#### சமூக விளைவுகள்

- ★ உறவுச் சிக்கல்கள்
- ★ களவு கொள்ளை
- ★ சமூகச் சீர்கேடுகள்
- ★ மது, மருந்துத் துர்ப்பாவனை

### நெருக்கீட்டை எதிர்கொள்ளல்

#### செய்ய வேண்டியவையும் வேண்டாதவையும்

உணர்ச்சிகளை அடக்கக் கூடாது அவற்றை வெளிப்படுத்துதல் நல்லது.

நடந்த விடயங்களைப் பற்றிக் கதைப்பதைத் தவிர்க்க முயல வேண்டாம் சந்தர்ப்பங்கள் கிடைக்கும் பொழுதெல்லாம் அவற்றைப் பற்றிக் கதைப்பதும் சிந்திப்பதும் நல்லது.

மற்றவர்களும் தங்கள் பிரச்சினைகளையும், மன உணர்வுகளையும் பகிர்ந்து கொள்வதைத் தடுக்க வேண்டாம் அவர்களையும் இணைத்துக் கொள்வோம்.

எங்கள் சிறு பிள்ளைகளும் எங்களைப் போலவே உணர்வுகளை அனுபவிப்பார்கள் என்பதை மறக்க வேண்டாம். அவர்களின் கவலைகளையும், பயங்களையும் எங்களுடன் பகிர்ந்து கொள்ள இடமளிப்போம்.

நித்திரை, ஓய்வுநேரம், சிந்திப்பது, சாந்த வழிமுறைகள் போன்றவற்றுக்கு போதியளவு நேரம் ஒதுக்குதல் நல்லது.

குடும்பத்தினருடனும், நண்பர்களுடனும் போதியளவு நேரத்தைச் செலவிடுதல் பயன்மிக்கது.

சடுதியான இழப்புகள், மாறுதல்களிற்குப் பிறகு, மீண்டும் விரைவாக முன்னைய வாழ்க்கைக்குத் திரும்புதல் நல்லது. இல்லையேல் படிப்படியாக ஒரு தங்கி வாழும் நிலையை நாம் அடைந்து விடுவோம்.

நம்பிக்கையிழத்தலைத் தவிர்க்க வேண்டும். சிறிய இலக்குகளை வெற்றி கொள்ளுதல் தன்னம்பிக்கையை வளர்க்கும்.

மது, மருந்துத் துர்ப்பாவனைக்கு அடிமையாகாமல் இருத்தல் வேண்டும். ஓய்வு நேரங்களை குழந்தைகளுடன் விளையாடியோ, பொது வேலைகள் செய்தோ போக்குதல் நன்மையானதாக இருக்கும்.

### நெருக்கீட்டில் சிறுவர்கள்

நெருக்கீட்டின் தாக்கங்கள், பெரியவர்களைவிட சிறுவர்களில் குறைவாகவே காணப்படுகின்றன. அவர்களில் இயல்பாகவே காணப்படுகின்ற ஆர்வம், துருவி ஆராய்கின்ற தன்மை, கபடமற்ற அப்பாவித்தனம், நிகழ்வுகளின் அர்த்தங்களையும் விளைவுகளையும் முற்றாகப் புரிந்து கொள்ளாமை போன்ற இயல்புகளால், அவர்கள் நெருக்கீடுகளைச் சுலபமாகவும், விளையாட்டுத் தன்மையுடனும் எடுத்துக் கொள்வர்.

எனினும், நெருக்கீடுகள் சிறுவர்களைப் பாதிக்கின்றது என்பதனையும் அந்தப் பாதிப்புகள் மிக ஆழமாக அவர்களின் மனதில் உறைந்து விடுகின்றன என்பதனையும் நாம் மறந்துவிடக் கூடாது. இப்படியான பதிவுகள், வளர்ந்தோரில் உள்ளது போன்ற நேரடியான வெளிப்பாடுகளாய் அன்றி, மறைமுகமாக அவர்களது விளையாட்டுகள் ஊடாகவோ, கதைகள், படங்கள் ஊடாகவோ அல்லது அவர்களின் கனவுகள் ஊடாகவோ வெளிப்படலாம்.

### நாங்கள் கவனிக்க வேண்டியவை

★பிள்ளைகள் நெருக்கீட்டைப் பற்றிக் கதைக்கவும் அறிந்து கொள்ளவும் உதவ வேண்டும்.

★பெரியவர்கள் அவர்களிற்கு முன்னால் அதிகளவுபயம், பதற்றம், பதகளிப்பு அடைதலைக் குறைத்தல் நல்லது.

★பிள்ளைகளை இயலுமான வரை பெற்றோரிடமிருந்து, முக்கியமாகத் தாயிடமிருந்து பிரிந்து போகாமல் பார்த்துக் கொள்ளல் வேண்டும்.



★ குழந்தைகளின் பாடசாலை, படிப்பு, விளையாட்டு போன்ற நாளாந்தச் செயற்பாடுகளை விரைவில் ஒழுங்குபடுத்துதல் நல்லது.

★.அவர்களது உளவெளிப்பாடுகளுக்காக,கதை சொல்லுதல், படங்கீறுதல், சுதந்திரமாக விளையாடுதல் போன்ற முறைகளை தாராளமாகக் கையாளுதல் வேண்டும்.

### எப்பொழுது உதவி தேவைப்படுகிறது?

★எங்கள் மனவெளிப்பாடுகளும், உடல் முறைப்பாடுகளும் கட்டுப்பாடில்லாமல் அதிகரித்து அல்லது நீண்டகாலமாக இருக்கின்ற பொழுது.

★சம்பவங்கள் நடந்து ஒரு மாதத்திற்குப் பிறகும் மனம் உணர்வுகளற்று, மரத்துப்போய் இருக்கின்ற பொழுது.

★பயங்கரக் கனவுகளும், நித்திரைக் குழப்பங்களும் தொடர்ச்சியாக இருக்கின்ற பொழுது.

★எங்களுடைய உணர்ச்சிகள், உணர்வுகளை யாருடனாவது பகிர்ந்து கொள்ளவேண்டும் போல இருக்கின்ற பொழுது.

★உறவுகளில் சிக்கல்கள் ஏற்படுகின்ற பொழுது.

★பாலியல் ரீதியான பிரச்சினைகள் ஏற்படுகின்ற பொழுது.

★எங்கள் குழந்தைகளில் உணர்ச்சிக் கோளாறுகள் அல்லது அசாதாரண நடத்தைகள் காணப்படுகின்ற பொழுது.

(நன்றி சாந்திகம்)

(வன்முறையில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக்கொள்ள)

# பொலீஸார் வீடுவீடாகச் சென்று வேட்பாளர்களைச் சந்திப்பர்

கொழும்பு,செப்.26

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களினதும் அவர்களது முக்கிய ஆதரவாளர்களினதும் வீடுகளுக்குச் சென்று அவர்களைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து தேர்தல் காலங்களில் வன்முறைகளில் ஈடுபட வேண்டாம் என அறிவுரை வழங்க பொலீஸார் நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

இதற்காக பயிற்றப்பட்ட பொலீஸாரைக் கொண்ட குழு ஒன்றை நியமிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற பிரதிப் பொலீஸ்மா அதிபரின் மாநாட்டிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. தேர்தல் நெருங்கிவரும் இந்தத் தருணத்தில் நாட்டில் தேர்தல் வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் அது தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த மாநாட்டில் கருத்து தெரிவிக்கப்பட்டது. இதன்படி நாட்டின் சகல பகுதிகளிலும் இருந்தும் அந்தந்தப் பகுதிகளில் அமைந்துள்ள பொலீஸ் நிலையங்களில் உள்ள பொறுப்பதிகாரி உட்பட 5 பேரைக் கொண்ட குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் அந்தந்தப் பகுதி வேட்பாளர்களுக்கு அறிவுரை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்காக நாட்டில் 338 பொலீஸ் நிலையங்களில் இருந்து பொலீஸார் அழைக்கப்படவுள்ளனர்.


இருந்தபோதும் இதனால் தேர்தல் வன்முறைகள் எந்த அளவுக்கு குறையும் என்பது பற்றி சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ரி)

# பெருமாளைச் சேர்த்துக் கொண்டது எமக்குப் பெருமை அளிக்கிறது

## மங்கள சமரவீர தெரிவிப்பு

கொழும்பு, செப்.26

வரதராஜப்பெருமாளை பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியலில் சேர்ந்திருப்பது குறித்து நாம் பெருமைப்படுகிறோம். அவர் தமிழீழக் கொள்கைக்கும், பிரபாகரனுக்கும் எதிராகச் செயற்படுகி




றார். ஆனால் ஐ.தே.கட்சி அவர் குறித்து தவறான கருத்துக்களைப் பரப்பி வருகிறது.

தொடர்புசாதன தபால் தொலைத் தொடர்பு அமைச்சரும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பேச்சாளருமான மங்கள சமரவீர கலதாரி ஹோட்டலில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரபாகரனுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கிறார். ஆனால் பிரபாகரனுக்கு எதிரான ஒருவரை எம்முடன் சேர்த்துள்ளோம். அவரும் எம்முடன் இணைந்திருப்பது குறித்து பெருமைப்படுகின்றோம்.

ஐ.தே.கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தேர்தல் வாக்குறுதிகளைச் செயற்படுத்த வருடாந்தம் 93.ஆயிரம் கோடிரூபா தேவை. அவைஎல்லாம் பொய் வாக்குறுதிகளே.

தேர்தல் வன்முறைகளிலும் ஐ.தே.கட்சி பதவிக் காலத்தில் இடம்பெற்றவையே அதிகம் என்றார். (இ-8)

# ஐக்கியத்தையும் பலத்தையும் நிரூபிக்க மலையக மக்கள் வாக்களிக்க வேண்டும்

## ஆறுமுகம் தொண்டமான் கோரிக்கை

கொழும்பு,செப்.26

"மலையக மக்கள் தமது ஐக்கியத்தையும் பலத்தையும் நிரூபிக்க எதிர்வரும் பொதுத்தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு வாக்களிக்க வேண்டும். இதனை விடுத்து பெரும்பான்மையினரின் அற்ப சலுகைகளுக்கு மயங்கி எமது பிரதிநிதித்துவத்தை இழந்து விட வழியமைத்துவிடக்கூடாது".

இப்படி இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், கால்நடை அபிவிருத்தி, பெருந்தோட்ட உள்ளக கட்டமைப்பு அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார்.

அப்புத்தனை, தம்பேத்தனை தோட்டத்தில் இடம்பெற்ற இ.தொ.க.தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

மலையக பெருந்தோட்ட மக்களின் போராட்டம் வலுப்பெற அடிகோலியது அவர்களின் ஐக்கியமும் கட்டுப்பாடான உணர்வும்தான் என்பதைக் கடந்த கால வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன.



காங்கிரஸின் கட்டுப்கோப்பும் அதன் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் மக்கள் ஈடேற்றத்துக்குமான பணியுமே எல்லோராலும் அவரை ஏகோபித்த தலைவராக ஏற்றுக் கொள்ள வைத்தது.

மலையக மக்களின் தனித்துவத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதில் அக்கறையாக உள்ள இ.தொ.கவின் எண்ணத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன் பல்வேறு நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகின்றோம். அந்த வகையில் நேரடியாக அறிவிக்காமலேயே வானொலி மூலமாக வந்த செய்தி கேட்டு எம் மீது நம்பிக்கை வைத்துக் கட்டுக்கோப்புடன் வேலை நிறுத்தத்தில் இறங்கியமை பாராட்டுக்குரியதாகும்.

இ.தொ.கா.சேவல் சின்னத்தில் பதுளை, கொழும்பு, வவுனியா, கண்டி மாவட்டங்களில் போட்டியிடுவதுடன், நுவரெலியாவில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிடுகின்றோம்.

சிறுபான்மை மக்களின் ஐக்கியத்தையும் பலத்தையும் நிரூபிக்க எமது கட்சி வேட்பாளர்களை ஆதரிக்க வேண்டியது உங்களின் கடமையாகும்.

போட்டியிடும் வேட்பாளர்களுடன் உங்களுக்குக் கருத்து வேறுபாடு இருந்தாலும் கூட பெரும்பான்மை இனத்தின் வாய்ப் பேச்சுக்கோ அல்லது அற்ப சலுகைகளுக்கோ துணைபோகாது சேவல் சின்னத்துக்கு வாக்களிக்கவும் - என்று தெரிவித்தார். (ஐ-9-4)

# வெளிநாட்டு கண்காணிப்புகுழு ஒக். முதல்வாரம் யாழ்.வரும்

கொழும்பு, செப்.26

பொதுத் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக கொழும்பு வந்துள்ள வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுவினர் தமது பணிகளை யாழ்ப்பாணத்திலும் மேற்கொள்வதற்கு ஒக்டோபர் முதல் வாரத்தில் யாழ்ப்பாணம் வர உள்ளனர் என்று கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜோன் குஷ்னறைன் தெரிவித்தார்.

கடந்த 21 ஆம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் பொதுத் தேர்தலில் போட்டியிட உள்ள அரசியல் பிரமுகர்களுடனான சந்திப்பின்போது தேர்தல் கண்காணிப்புக் குழு இதனைத் தெரிவித்தது.

அந்தக் குழுவின் தலைவர் மேலும் தெரிவிக்கையில் -

எதிர்வரும் 30ஆம் திகதி முதல் தமது பணிகளை மேற்கொள்ளப் போவதாகவும் தமது குழு தனக்குள்ள அதிகாரத்தின் கீழ் நீதியானதும் நேர்மையானதுமான பொதுத் தேர்தலுக்கு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் எனவும் கூறினார். (இ-8)

# 1980 வேலை நிறுத்தத்தின்போது ரணில் நித்திரையில் இருந்தாரா?

## பிரதமர் ரத்னசிறி கேள்வி

கொழும்பு,செப்.26

அரச ஊழியர்களின மாதாந்தச் சம்பளத்தில் மூவாயிரம் ரூபாவும் ஓய்வூதியர்களின் கொடுப்பனவில் எண்ணூறு ரூபாவும் அதிகரிப்புச் செய்யப்போவதாகக் கூறும் ரணில் 1980 ஜுலை வேலை நிறுத்தத்தின் போது நித்திரையில் இருந்தாரா?

இவ்வாறு, பதுரலியாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய பிரதமர் ரத்தினசிறி விக்கிரமநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் 1980 ஆம் ஆண்டு தமது நாளாந்தச் சம்பளத்தைப் பத்து ரூபாவால் அதிகரிக்கக்கேட்ட தொழிலாளரின் கோரிக்கையை நிராகரித்த ரணில் இன்று மாதச் சம்பளத்தில் மூவாயிரம் ரூபா அதிகரிக்கப் போவதாகக் கூறியுள்ளமை ஒரு கேலிக்கூத்து ஆகும்.

ஓய்வூதியர்களுக்கு அதிகரித்த இருநூறு ரூபாவைக்கூட 1994ஆம் ஆண்டுவரை முன்னைய ஐ.தே.கட்சி அரசு வழங்கவில்லை - என்றார். (இ-8)

# காலத்தின் தேவை கருதியே போட்டியிடுகிறோம் நாடாளுமன்றத்தை பகிஷ்கரிக்கவும் நாம் தயார்

## தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கூறுகிறார்

கொழும்பு,செப்.26

நாடாளுமன்றக் கதிரைகளை அலங்கரிப்பதற்காக நாம் இந்தத் தேர்தலில் போட்டியிடவில்லை. காலத்தின் கட்டாயம கருதியே போட்டியிட முன்வந்துள்ளோம். தேவை ஏற்படின் தமிழ் மக்களின் நலன் கருதி நாடாளுமன்றத்தை பகிஷ்கரிக்கவும் நாம் தயாராகவுள்ளோம்.

மேற்கண்டவாறு தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி திருகோணமலை நகர மண்டபத்தில் இடம்பெற்ற ஆதரவாளருடனான சந்திப்பின் போது தெரிவித்தார்.

அப்பாத்துரை விநாயகமூர்த்தி அங்கு தொடர்ந்து உரை நிகழ்துகையில் திம்பு கோட்பாட்டின் அடிப்படையிலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வினைக்காண அரசு முயல வேண்டும்.

இதனை விடுத்து அரசியல் தீர்வுத் திட்டம் என்ற பெயரில் ஒரு தீர்வுத் திட்டத்தினை சமர்ப்பித்து தமிழ் மக்களை ஏமாற்ற முயல்வது தவறான செயலாகும்.

யாருடன் பேச வேண்டுமோ அவர்களுடன் பேசி ஓர் இணக்கப்பாட்டினை ஏற்படுத்தி அதன் அடிப்படையில் ஒரு தீர்வுத் திட்டத்தினை உருவாக்கி மக்கள் முன்னிலையில் சமர்ப்பிக்க வேண்டும்.

இதற்கு அனுசரணையாக உடனடியாகப் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு மூன்றாம்தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.



இத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதன் மூலமே இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் காண முடியும்.

இந்த வகையில் அரசுக்கு ஓர் அழுத்தத்தைக் கொடுக்கும் வகையிலேயே இந்தத் தேர்தலில் நாம் போட்டியிடுகிறோம். அமரர் குமார் பொன்னம்பலம் சர்வதேச ரீதியில் இத்தகைய அழுத்தத்தினை உருவாக்கி வந்துள்ளார்.

இன்று யாழ்.குடாநாடு தொடர்பான விடயங்கள் முழுமையாக இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன. வெளிநாடுகளில் எதுவும் தெரிவிக்கப்படுவதில்லை 80 ஆயிரம் வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. 24 ஆயிரம் குடும்பங்கள் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளன. 20 ஆயிரம் கைம்பெண்கள் வாழ வழி தெரியாது தவிக்கின்றனர்.

அண்மையில் நான் யாழ் குடாநாட்டுக்குச் சென்று திரும்பினேன். காது செவிடுபடும்படியான எறிகணை வீச்சு மற்றும் பல்குழல் துப்பாக்கிகளின் சத்தங்கள் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அம்மணியின் ஆறுஆண்டுகால ஆட்சியில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் துயரங்கள் வார்த்தைகளில் அடங்கமாட்டா.

எம்மைப் பொறுத்தவரை இதனை தமிழ் மக்களின் தலை விதியை நிர்ணயிக்கும் தேர்தலாகவே கருதுகிறோம். நாம் தெரிவு செய்யப்பட்டாலும் எந்த அரசுடனும் இணையமாட்டோம்.

என்றார். (இ-4)

# அரசின் யோசனைகளை இனப்பிரச்சினைக்கு தீர்வான அடிப்படையாகக் கொள்ளமுடியும்

## நெல்லியடியில் நடைபெற்ற கருத்தரங்கில் வரதர் அணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.26

"தற்போதைய தீர்வு யோசனைகளை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஓர் அடிப்படையாகக் கொள்ள முடியும். இந்த தீர்வு விடயத்தில் அக்கறையுள்ள ஒரே ஒரு சிங்களத் தலைவர் சந்திரிகா மட்டுமே."

நெல்லியடியில் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி (சுயேச்சைக்குழு -2) முக்கியஸ்தரான தி.ஸ்ரீதரன் தமது அலுவலகத்தில் நடத்திய கருத்தரங்கொன்றில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தற்போதைய நிலைமை தொடருமானால் ஏற்கனவே அழிந்து போயிருக்கும் எமது பிரதேசங்கள் முற்றாக அழிந்து போய்விடும். வெளிநாடுகளிலோ கொழும்பிலோ வாழ்பவர்களில் ஒரு பகுதியினர் யாழ்ப்பாணத்தில் மனித வாழ்வைத் தாக்குப்பிடிப்பதற்கான பொருளாதார உதவிகளைச் செய்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால் இன்னுமொரு பகுதியினர் யுத்தத்தை ஊக்குவிக்கும் வகையில் நடந்து கொள்கிறார்கள். அவர்கள் அகதி முகாம்களிலும், மரங்களின் கீழும் வாழ்பவர்களைப் போராடுமாறு கூறுகிறார்கள்.

ஆனால் அவர்களின் பிள்ளைகளோ கேம்பிரிட்ஜிலும், ஒக்ஸ்போர்ட்டிலும், ஒட்டாவா பல்கலைக் கழகங்களிலும் படிப்பதற்கு இடம் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு தீர்வு உருவாவதற்கும், தமிழ் மக்களின் அன்றாட அவலங்களை முடிவுக்குக் கொண்ட வருவதற்கும் முன்னுரிமை அளிக்கப்படும். மேலும் வரதராஜப்பெருமாளின் அனுபவங்கள், இந்தியாவுடனான நல்லெண்ணம் என்பவற்றை உபயோகித்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் - என்றார். கருத்தரங்கில் பங்கு பற்றியவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், பாரம்பரியமாக மீன்பிடித் தொழிலை மேற்கொள்பவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அத்தொழிலை பயிற்றுவிக்க முடியாதிருக்கிறது என்றும் தமது கல்வியின் மூலம் பெற்ற தகுதிக்கு ஏற்ப அவர்களால் வேலை பெற முடியவில்லை என்றும் அதேவேளை தகுதி குறைந்தவர்கள் வேலை பெறுகிறார்கள் என்றும் தெரிவித்தனர்.

இராணுவத்தினரின் சுற்றிவளைப்புகளின் போது பிள்ளைகள் கைது செய்யப்படுகிறார்கள் என்றும் இதன் இறுதி விளைவு அவர்கள் வேறு வழிகளை நாடுவதாகவே இருக்கிறது என்றும் தெரிவித்தனர். (இ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள M.D 90 விற்பனைக்குண்டு. தொடர்பு: 593, பருத்தித்துறை வீதி, நல்லூர். (யாழ். மாநகரசபை அருகில்) (78748)

வேலை செய்து கொண்டிருக்கும் நிலையில் உள்ள 221/2 H.P H.R மொடல் ஜெனரேற்றர் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 'செங்கமலவாசம்' குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில். (78749)

ஆங்கில தட்டச்சு இயந்திரம் (Brother), நஷனல் பிளென்டர் (2in 1) (Blender), மின அடுப்பு, ஜேர்மன் கொற்பிரேற் வேறும்சில. தொடர்பு: 112, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (78685)

நல்லின அல்சேஷன் ஆண் நாய்க்குட்டி 4 மாதம் நிரம்பியது. பூச்சி நீக்கப்பட்டது. தொடர்பு: இல. 167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (78756)

## O/L கணிதம்

**Distinction** பெறுபேறடைவதற்காக ஆரம்ப அறிவிலிருந்து சகல அலகுகளும் கற்பிக்கப்பட்டு மீட்டலுடன் வினாவிடை வகுப்புகளும் 20 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் நிறைவேற்றப்படும். க.ஆறுமுகநாதன், No.102/12, கன்னாதிட்டி (காளிகோவில் பின்வீதி), யாழ்ப்பாணம். (78723)

## தவறிவிட்டது

மூளாய் வீதி, வட்டுக்கோட்டை எனும் முகவரியில் வசிக்கும் திரு. நாகேந்திரன் வீரபாண்டியதாசன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (582481687v), விசேட அடையாள அட்டை (091205852) ஆகியன பஸ்ஸில் (இல.789) தவற விடப்பட்டுள்ளன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய விலாசத்தில் ஒப்படைக்கவும். (78751)

ஒரு தொகைப் பணம், தொழில் அ.அட்டை, தேசிய அ.அட்டை (இல. 671371291v) என்பன பேர்ஸ் ஒன்றுடன் 18 ஆம் திகதி நெல்லியடிக்கும் கோயில் சந்தைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நெல்லியடி கிறிஸ்ரல் கல்வி நிலையத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (78757)

## திருமண சேவை

எங்களிடம் எல்லா மதங்களிலும் மணமக்கள் உண்டு. புகைப்படம், ஜாதகங்களுடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமணசேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (78752)

## காணவில்லை

வெள்ளைநிற கறவைப் பசுவை கடந்த 22-09-2000 முதல் காணவில்லை. அடையாளம் இரு கன்னங்களின் பின்முதுகுப்பக்கம் X உண்டு. இரு கொம்புகளும் பால் வெள்ளை, பட்டிபார்த்த கொம்பு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: இல. 59, சிவன் புதுவீதி, நல்லூர். (78755)

## அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி, செப்.26

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நெல்லியடியில் இயங்கும் வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் அதிபர்கள் பாடசாலைகளின் வகுப்பு ரீதியாக மாணவர்களின் தொகை பற்றிய விபரங்களைக் கொண்டு வருமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (க-117)

## வாக்குச்சீட்டுகள் வந்தன

தென்மராட்சி, செப்.26

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு தபால்மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பம் செய்த தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்தவர்களுக்கான வாக்குச் சீட்டுகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

இதேவேளை -

திணைக்கள நிறுவனங்கள் ஊடாக விண்ணப்பம் செய்தவர்களின் வாக்குச் சீட்டுகள் அந்தந்த நிறுவனங்களுக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## உண்ணாவிரதம் தொடர்கிறது

ஜேர்மனியில் இருந்து தம்மைத் திருப்பி அனுப்பவேண்டாம எனக்கூறி சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்துள்ள நான்கு இளைஞர்களின் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நேற்று 22 ஆவது நாளாக இவர்களது சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

நான்கு உண்ணாவிரதிகளும் உடல்கள் பலவீனமடைந்த நிலையில் சோர்ந்து காணப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 25 - 09 - 1931



விண்ணில் 08 - 10 - 1999

**அமரா செல்லையா கார்த்திகேசு**

திதி: 26 – 09 – 2000

அன்பாலும் பண்பாலும் அரவணைத்த ஐயா!
உங்கள் பிரிவால் என்றும் வாடுகின்றோம் ஐயா!
ஆறாத் துயரினில் எம்மை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டீர்களே?
மங்காப் புகழுடனே மறைந்து விட்ட
உங்களது நீங்கா நினைவலையில்
நாம் மிதந்து ஓராண்டுப் பூர்த்தியில்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
அராலி முருகனை வேண்டுகின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்.**

*செ. கணேசன் (சகோதரன்)*
*ஸ்ரீ முருகன் லோன்றி,*
*நவீனசந்தை, யாழ்ப்பாணம்.*

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
(78744)

# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

வரணி, கரம்பைக் குறிச்சியைச் சேர்ந்தவரும், இப்பகுதி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருமான,

**திரு. க. ரங்கநாதனின்**
**அன்புத் தந்தை**
**அமரர்**
**கார்த்திகேசு - கதிர்காமநாதன்**

அவர்கள் கடந்த 27-08-2000 ஆம் திகதி அமரத்துவம் அடைந்தார். அவருக்கு எமது அஞ்சலியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*ஊழியர் நலன்புரிச் சங்கம்,*
*பிரதேச செயலகம்,*
*தென்மராட்சி,*
*சாவகச்சேரி.*

(C/13070)

# 31 ஆம் நாள் நினைவு ஆரமும் நன்றி நவிலலும்

மடியில் கனியென 29 - 12 - 1937



மண்ணில் விதையென 27 - 08 - 2000

**கார்த்தி கேசு கதிர்காமநாதன்**
**(நாதண்ணை)**

**'அவணியில் பிறந்து அவ்லமின்றி வாழ வழிவகுத்து**
**எமை ஆறாத்துயரில் ஆழ்த்தி அமரத்துவம் எய்திய**
**எங்கள் குடும்பத்தின் சுடர் விளக்காம் கதிர்காமநாதனை**
**அகமகிழ்ந்து அணைத்திடுவீர் திக்கில் கந்தனே'**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எங்கள் அன்புத் திருவுருவின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு நேரில் கலந்தும், கடிதம், தொலைபேசி, பக்ஸ், தந்திகள் மூலம் அனுதாபம் தெரிவித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு ஆகவேண்டிய உதவிகள் புரிந்தோருக்கும், அன்னாரின் ஆவிகாக்க இறுதி மூச்சுவரை பாடுபட்ட வைத்தியப் பெருமக்களுக்கும், இன்றைய அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகளில் கலந்து சிறப்பிப்போருக்கும் எம் இதய பூர்வமான நன்றிகள்.


**மனைவி, மக்கள், மருமகன், பேரப்பிள்ளைகள்.**

*கரம்பைக்குறிச்சி,*
*வரணி.*

(78720)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 30 — 03 — 1916



உதிர்வு 27 — 08 — 2000

**அமரா சின்னத்துரை இரத்தினம்**

குரும்பசிட்டி
(ஓய்வுபெற்ற ஒவசியர், யாழ்.போதனா வைத்தியசாலை)

27-08-2000 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் சி. இரத்தினம் அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (26.09.2000) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*கருவேலடி ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

(78726)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**அரியகுட்டி நாகரத்தினம்**
**(குகன்)**
(உரிமையாளர் குகன் ஸ்ரூடியோ, பருத்தித்துறை)

**மலர்வு** 15-01-1917
**உதிர்வு** 26-09-1997

திதி: 12 – 10 – 2000

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

**அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*குகன் ஸ்ரூடியோ,*
*பருத்தித்துறை.*

(C/13071)

# இராணுவ நடவடிக்கையை நிறுத்த....

(முதலாம் பக்கத் தொடர்)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மையில் தேர்தல் ஆணையாளரைச்சந்தித்தசமயம், யாழ். மாவட்டத்தில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்று நாம் கோரினோம். அங்கு சமுகம் தந்த ஏனைய தமிழ்க் கட்சிகளும் இந்தக் கோரிக்கையை முன் வைத்தன.

ஆனாலும் அரசு அண்மையில் வழங்கியுள்ள அறிவுறுத்தல்களின்படி யுத்தம் தொடரும் நிலையே காணப்படுகின்றது. இதற்குச் சான்றாக சாவகச்சேரி நகர் மீதான தாக்குதல் அமைந்துள்ளது. எப்படி யுத்தம் நடத்தப்படுகின்றது? எவ்வாறு தமிழர் சொத்துக்கள் அழிக்கப்படுகின்றன? என்பவற்றுக்கு இந்தத் தாக்குதல் சான்றாக உள்ளது.

கடந்த சனிக்கிழமை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவைச் சந்தித்தேன் ''யாழ்ப்பாணத்தில் இராணுவ நடவடிக்கைக்காக பல்குழல் பீரங்கிகளைப் பயன்படுத்த வேண்டுமா? மிக் விமானங்கள் குண்டுகளை வீச வேண்டுமா?'' என்று அவரிடம் கேட்டேன். ''நமது தரப்பு இழப்புக்களைக் குறைக்க வேறு வழி இல்லை'' என்று அவர் பதில் அளித்தார்.

இந்த வகையில் தாக்குதல் தொடர்ந்தால் குடாநாட்டில் மிச்சம் மீதி எதுவும் இருக்காது. இதன் காரணமாகவே யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்று கோருகின்றோம்.

## அவசிய தேவை யுத்த நிறுத்தமே

இன்று யாழ்ப்பாண மக்களுக்கு அவசரமானதும் அவசியமானதுமான தேவை யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்பதே ஆகும். யாழ். தேர்தலில் போட்டியிடும் சகல தமிழ்க் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் இணைந்து ஓரணியில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டிய அவசியத்தை அரசாங்கத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வலியுறுத்த வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணியாகஇருக்கலாம், ஈ. பி. டி. பியாக இருக்கலாம் அல்லது எவராக இருந்தாலும் யுத்தத்தை நிறுத்த சகலரும் ஒன்றுபட வேண்டும்.

மக்களை அழிவில் இருந்து காப்பாற்றுவது அரசியல் கட்சிகளின் முக்கிய கடமை ஆகும். இந்தத் தேர்தல் மூலம் யுத்தத்தை நிறுத்த சகல தமிழ்க் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் இணைந்து பேச்சு நடத்த வேண்டும். அதற்கான கலந்துரையாடலை ஏற்பாடு செய்ய ஈ. பி. ஆர். எல். எவ் தயாராக இருக்கின்றது. இதற்காக தேர்தலில் போட்டியிடும் சகல அரசியல் கட்சிகளுக்கும், சுயேச்சைக் குழுக்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

திட்டமிடப்பட்டு தமிழர்களை அழிக்க நடத்தப்படும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்று சகலரும் ஒன்று சேர்ந்து முடிவு செய்து அரசுக்கு அறிவிக்கவேண்டும். இன்றுள்ள காலகட்டத்தில் இந்த விடயத்தில் ஒன்றுபட எவராவது முன்வரா விட்டால் அவர்களின் கருத்தில் கோளாறு இருப்பதாகவே கருதவேண்டும்.

## தமிழர்களை அழிக்கத் திட்டம்

தமிழ் மக்களுக்கு எதிராக பாரிய திட்டம் ஒன்றை அரசு நடைமுறைப்படுத்தி வருகின்றது. யாழ். மக்களை அழித்தொழிப்பது அந்தத் திட்டத்தின் ஓர் அம்சம். இந்த மண்ணில் இருந்து அவர்களை விரட்டுவது மற்றொரு அம்சமாகும். ஒரு பக்கத்தில் பல்குழல்பீரங்கிகள் மற்றும்'மிக்' விமானங்கள் மூலம் மக்களையும் அவர்களது உடைமைகளையும் அரசு அழிக்கின்றது. மறுபுறத்தில் சரக்குக் கப்பல் மூலமாக மக்களைக் குடாநாட்டில் இருந்து வெளியேற்றுகின்றது.

அதே சமயம் யாழ். மாவட்டத் தேர்தலுக்கு என்று ஆறு லட்சம் வாக்காளர் அட்டைகளை அரசு அனுப்புகின்றது. அத்துடன் யுத்தத்தையும் தீவிரப்படுத்தி வருகின்றது.

## சனத்தொகை குறைகிறது

யாழ். மாவட்டத்தில் 81 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட குடிசன மதிப்பீட்டில் ஒன்பதரை லட்சம் மக்கள்இருப்பது கணக்கிடப்பட்டது. இருபது வருடங்களுக்குப் பின்னர் குடாநாட்டின் சனத்தொகை நாலே முக்கால் லட்சம் ஆக உள்ளது. உண்மையில் பதின்மூன்று அல்லது பதின்னான்கு லட்சமாக சனத்தொகை உயர்ந்திருக்க வேண்டும். தொடரும் யுத்தம் காரணமாக சனத்தொகை இரண்டரை லட்சமாகக் கூடக்குறையலாம்.

இலங்கையில் முதலாவது குடிசன மதிப்பீடு 1881 ஆம் ஆண்டு இடம் பெற்ற சமயம் —அதாவது 120 வருடங்களுக்கு முன்னர் — யாழ்ப்பாணத்தில் இரண்டரை லட்சமாக சனத்தொகை இருந்தது இன்று அந்த நிலையை நோக்கி யாழ்.மாவட்ட சனத்தொகை போகின்றது.

எனவே தமிழ்க் கட்சிகள் யுத்தம் நிறுத்தப்பட வேண்டிய அவசியத்தை உணர வேண்டிய காலகட்டம் இது என்று கூற விரும்புகிறேன்.

மக்களின் விடிவுக்காக நிம்மதியான வாழ்வுக்காக, அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக நாடாளுமன்றத்தை மேடையாகப் பாவிப்பதற்காக வாக்குக் கேட்கும் தமிழ்க் கட்சிகள் யுத்தத்தை நிறுத்தவேண்டிய அவசியம் குறித்துக் கலந்துரையாட முன்வரவேண்டியது அவசியம் ஆகும்.

எனவே தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் ஒன்று கூடி ஒரேஅணியில் யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்று அரசிடமும், சர்வதேச சமூகத்திடமும் கோரவேண்டும்

## ஒற்றுமை முயற்சி தோல்வி

கடந்த நாடாளுமன்றத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஈ.பி.டி.பியைச் சேர்ந்த 9 பேரும் வன்னியில் இருந்து புளொட் அமைப்பைச் சேர்ந்த மூவரும் கிழக்கில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஐவருமாக மொத்தம் 17 பேர் அங்கம் வகித்தனர். ஆனால் அவர்களிடையே ஐக்கிய நிலை காணப்படவில்லை.

1994 ஆம் ஆண்டிலிருந்து ஒரு வாக்குப் பெரும்பான்மையுடன் மட்டும் ஆட்சி நடத்திய அரசாங்கத்தில் இந்த 17 பேரும் ஐக்கியப்பட்டுச் செயற்பட்டிருந்தால் தமிழ் மக்களின் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்திருக்கும். ஆனால் இவர்கள் கடந்த ஆறு வருடங்களும் ஐக்கியமாக எந்த விடயத்தையும் முன்னெடுக்கவில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரே குரலில் தீர்வு காண்பதற்காக மூன்று தடவைகள் முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ் மக்களின் சார்பாக இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஒரே குரலில் ஐக்கியமாகச் செயற்பட எடுக்கப்பட்ட அந்த முயற்சிகள் தோல்வியில்தான் முடிந்தன. தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. டி. பி. மற்றும் ஏனைய தமிழ்க் கட்சிகள் பேச்சுக்கு முன்வந்த போதும் ஐக்கியம் ஏற்படவில்லை.

விடுதலைப் புலிகளின், இராணுவ அழுத்தங்கள் இருக்கும் அதேசமயம் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் தொடர்பான கோரிக்கைகள் வெற்றிபெற தமிழ்க் கட்சிகள் ஏகோபித்துக் குரல் எழுப்ப வேண்டும்

தமிழ்க் கட்சிகளைக் கூறுபோட்டு அதன் மூலம் தமக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கும் செயலில் அரசு ஈடுபட்டுள்ளது.

டக்ளஸ் தேவானந்தாவை ஒரு புறத்திலும், அ. வரதராஜப் பெருமாளை மறுபுறத்திலும் தமிழர் விடுதலைக் கூட்டணியை மற்றொரு புறத்திலும் தனித்தனியாக அரசு கையாள்கின்றது. அரசின் இந்த முயற்சி தமிழ்மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய கௌரவமான தீர்வுக்குச் சாதகமாக அமையமாட்டாது. பாதகமான சூழ்நிலையையே உருவாக்கும்.

தமிழ்க் கட்சிகள் ஐக்கியப்படுவதற்கு ஈ. பி. ஆர். எல். எவ். தனது முழுப்பங்களிப்பையும் வழங்கும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள், மாணவர் பிரதிநிதிகள், ஆசிரியர் மற்றும் தொழிற் சங்கப் பிரதிநிதிகள், சகல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளடக்கிய 'தமிழ் தேசிய சபை' ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

இந்தச் சபை மூலம் தமிழ் மக்களின் கருத்துக்கள், கோரிக்கைகள் ஆகியவற்றை ஒரே குரலில் வலியுறுத்த வேண்டும். அந்தக் கோரிக்கையை அரசு நிராகரித்தால், சகல தரப்பு மக்களும் இணைந்து மக்கள் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

ஓர் இனத்தைப் பொறுத்த வரையில் இவ்வாறு சபை உருவாக்கப்படுவது புதிய விடயம் அல்ல பலஸ்தீனத்தில் இவ்வாறு உருவாக்கப்பட்ட சபை மூலமே அந்த மக்கள் விடுதலை நோக்கிச் செல்லக் கூடியதாக இருக்கின்றது.

இன்றுள்ள சூழல், தேவைகளை நோக்கும் போது மக்களின் அவசர, அவசிய தேவைக்கு இது போன்ற சபை அமைக்கப்பட வேண்டிய கட்டாயம் உள்ளது.

இந்தச்சபையை உருவாக்குவது சம்பந்தமாக இரு வருடங்குகளாக தமிழர் விடுதலைக் கூட்டணி உட்படப் பல கட்சிகளுடன் பேசினோம். ஐக்கியப்படும் விடயத்தில் குழப்பம் நிலவியதால் அந்தச் சபையை உருவாக்க முடியாது போனது.

வெறுமனே ஆசனங்களுக்கு ஆசைப்பட்டு ஈ. பி. ஆர். எல். எவ் தேர்தலில் போட்டியிடவில்லை. சரியான தமிழ் தலைமை ஒன்றை உருவாக்க மக்களின் ஆணையைக் கோரும் வகையிலேயே இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறோம்

குண்டு மழை பொழியும் நேரத்தில், வெட்கித் தலைகுனியும் நிலையில் வாக்குக் கேட்டு வந்துள்ளோம். ஒரு தலைமையை உருவாக்கவே தேர்தலில் குதித்துள்ளோம். நாம் தேர்தலில் இருந்து ஒதுங்கினால் கடந்த 6 வருடங்கள் போன்று பிழையான பிரதிநிதிகள் தெரிவாகிவிடுவர். இதைத் தடுக்கவே வந்துள்ளோம்.

## மோசமான அரசியல் பாரம்பரியம்

கட்சி அலுவலகங்கள் அரச திணைக்களங்களாகவும், அரச செயலகமாகவும் இயங்கும் மோசமான அரசியல் பாரம்பரியத்தை இங்கு காண்கிறோம். கட்சி அலுவலகங்களில் வேலை வழங்கித் திணைக்களம் நடத்தும் அரசியலை 42 வருட அரசியல் வாழ்க்கையில் இப்போது தான் பார்க்கிறேன்.

மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக அரச திணைக்களங்கள், செயலகம் ஆகியவற்றைத் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். இதற்கு அரசும் உடந்தையாக இருக்கின்றது.

தேர்தல் காலத்தில் தீவகத்தில் ஏனைய தமிழ் கட்சிகள் பிரசாரம் செய்ய வசதியாக ஈ.பி.டி.பியின் படை அணிகளை நிராயுதபாணிகளாக்க வேண்டும் அல்லது அவர்களை முகாம்களுக்குள் முடக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையாளரிடம் நாம் கோரியிருந்தோம்

அரசிடம் சம்பளம் பெறும் துணைப்படை ஈ பி டி.பி. அமைப்பிடம் உண்டு. அந்தத் துணைப்படை தீவகத்தில் இருந்தால் வேறு கட்சிகள் பிரசாரம் செய்ய முடியாது அப்படியாயின் எப்படி நீதி, நியாயமான தேர்தலை நடத்த முடியும்? எனவே சகல கட்சிகளும் பிரசாரம் செய்ய அரசு உதவவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் ஒருசில கட்சிகளினதும் சுயேச்சைக் குழுவினதும் சுவரொட்டிகளை மண்டைஎண்ணெய் போட்டுப் படையினரும் பொலிஸாரும் அழிக்கின்றனர் ஈ.பி.டி.பி பெருமாள் அணி ஆகியவற்றுடன் சேர்ந்து படையினரும், பொலிஸாரும் சுவரொட்டிகளை ஒட்டுகின்றார்கள். ஏனைய கட்சிகளுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்கும் பாதுகாப்பு நெருக்கடி கொடுக்கிறார்கள்.

இந்த நிலைமை தொடர அரசு அனுமதிக்கக்கூடாது. இதனை நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## தொங்கு நாடாளுமன்றம்

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலை அடுத்து தொங்கு நாடாளுமன்றமே அமையும் எனவே தமிழ் மக்கள் தமது இனப்பிரச்சினைத் தீர்வில் அக்கறை கொண்டவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். அவர்கள் மூலம் தீர்வை எட்ட முனைய வேண்டும். இதற்கு தமிழ் கட்சிகளிடையே ஐக்கியம் ஏற்பட வேண்டியது அவசியம்—

இப்படி அவர் கூறினார்.

(இ-3)

---


## தவறாது சமுகம்தரவும்

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக சகல வருட மாணவருக்குமான அவசர கலந்துரையாடல் நாளை (27-09-2000) புதன்கிழமை காலை 10-00 மணியளவில் நுண்கலைக்கழக கலை அரங்கில் நடைபெற உள்ளதால் அனைவரும் தவறாது சமுகம்தரும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

கவின் கலை மன்றம்,
இராமநாதன் நுண்கலைக் கழகம்.
யாழ். பல்கலைக் கழகம்,
மருதனார்மடம்.

(78765)


---

## சமூகக் கல்வி தின விழாவும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், செப். 26

புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலய சமூகக் கல்வி தின விழாவும் கண்காட்சியும் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் நா பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற ஆசிரியர் சி. மாணிக்கம் கலந்து கொள்வார்

கண் காட்சியைத் திறந்து வைத்தலைத் தொடர்ந்து சொற்பொழிவுகள், கவிதை, நாடகம், வினா விடைப் போட்டி நாம் நடும் விழா ஆகிய நிகழ்வுகளும் இடம் பெறும் (8-7)

## கண்ணி வெடியில் காயம்

வவுனியா, செப். 26

தட்சினார்மருதமடுப் பகுதியில் நேற்று நண்பகல் இடம் பெற்ற கண்ணி வெடிச் சம்பவம் ஒன்றில் படுகாயமடைந்ததாகத் தெரிவித்து இளைஞர் ஒருவர் நேற்று மாலை வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சுப்பிரமணியம் செந்தில் நாதன் (வயது 24) என்பவரே படுகாயம் அடைந்தவர் ஆவார்.

(இ-7)

## 5 ஆம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிப்பு

வடமராட்சி, செப். 26

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் மகாவித்தியாலய விமானக் குண்டு வீச்சில் பலியான 22 மாணவர்களின் ஐந்தாவது ஆண்டு நினைவு தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது.

தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நாகர் கோயில் மகாவித்தியாலய அதிபர் சி. மகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவு தினத்தின் போது மரணமடைந்த 22 மாணவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் மலரஞ்சலி செய்து தீபாராதனை காட்டினார்கள்.

இதைத் தொடர்ந்து நாகர் கோயில் மகாவித்தியாலய மாணவர்களின் கவிதாஞ்சலி இடம்பெற்றது

ஆசிரியர்களான எஸ். நாகநாதன், கே புவனேந்திரராஜா, தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலய அதிபர் கே கணபதிப்பிள்ளை, பெற்றோரான எம். நேசரட்ணம் ஆகியோரின் நினைவுரைகளும் இடம்பெற்றன

நாகர்கோயில் மகாவித்தியாலயம் தும்பளை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயத்தில் இயங்கிவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது

(இ-173)

## பற் சிகிச்சை

சண்டிலிப்பாய், செப். 26

வட்டுக்கோட்டை தொகுதி அரசினர் கிராமிய வைத்தியசாலையிலுள்ள பற்சிகிச்சை நிலையத்தில் புதன்கிழமைகளிலும், சனிக்கிழமைகளிலும் பற்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை —

இவ் வைத்தியசாலைக்கு மூன்றாம் காலாண்டுக்கான மருந்துவகைகள் யாழ் சுகாதாரத் திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவினால் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். சதாசிவம் தெரிவித்தார். (க 1.3.5)

### ஜெனரல் அனுருத்த தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தெரிவிப்பு:

# ஜானக பெரேரா பொறுப்பேற்ற பின்னரே கேந்திர நிலைகளை இழக்க நேர்ந்தது!

### படைகளை பலாலிக்கு வாபஸ் பெறவும் திட்டமிட்டிருந்தாராம்

கொழும்பு,செப்.26

குடாநாட்டை மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா பொறுப்பேற்ற பின்னர் அங்கு கேந்திர நிலையங்களை இழக்க நேரிட்டது. யாழ். நகரம் உட்பட முக்கியமான இடங்கள் புலிகளின் கரங்களுக்குச் செல்லக் கூடிய நிலைமை காணப்பட்டது. யாழ்ப்பாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் இருந்து ஆயுதங்களுடன் இராணுவத்தை பலாலியை அண்டிய பகுதிக்கு வாபஸ்பெறுவதற்கான நடவடிக்கையை அவர் மேற்கொண்டிருந்தார்.

குடாநாடு இழக்கப்பட்டுவிடும் என்று முக்கிய அதிகாரிகள் தெரிவித்ததை அடுத்தே ஜானக பெரேரா இடம் மாற்றப்பட்டார்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜெனரல் அனுருத்த ரத்வத்த.

கடந்த ஞாயிறு இரவு சுயாதீன தொலைக்காட்சியில் இடம்பெற்ற 'மக்கள் நீதிமன்றம்' என்னும் கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் அனுருத்தவுடன் பதுளை மாவட்ட ஐ.தே.க. எம்.பி டபிள்யூ யூ.கே.எம். லொக்கு பண்டார, பூமிபுத்ர கட்சியின் தலைவர் ஹரிச்சந்திர விஜயதுங்க, சுசில் முனசிங்க (ஐ.தே.க. அதிருப்திக் குழு) மற்றும் பௌத்தபிக்கு ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டோரின் கேள்விகளுக்கும், தொலைபேசி மூலம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் இந்த அரசியல் பிரமுகர்கள் பதிலளித்தனர்.

'சிறந்த படை அதிகாரியான ஜானக பெரேரா யாழ். படையணிப் பொறுப்பில் இருந்து ஏன் மாற்றப்பட்டார்?' என்று பௌத்த பிக்கு ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளித்த போதே அனுருத்த மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அந்த நிகழ்ச்சியில அவர் மேலும் கூறியதாவது:-

படைக்கு ஆள் திரட்டித் தருவதாகப் பலரும் வாய்ப்பேச்சுப் பேசுகின்றனர். எனினும் செயலில் எவரும் அதனைச் செய்து காட்டவில்லை. இந்நிலையில் யுத்தத்தை சரியாக முன்னெடுக்கவில்லை என்று குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படுகின்றன. ஆயினும் யுத்தத்தை நிறுத்தும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

யுத்தத்தால் மட்டும் தமிழ் மக்களின் அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது. ஒரு பிரபாகரன் அழிக்கப்படும்போது பல பிரபாகரன்கள் தோன்றுவார்கள்.

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக வெளிநாடுகளோ, வெளிநாடுகளில் உள்ள அமைப்புகளோ எந்த வகையிலும் இலங்கைக்கு அழுத்தத்தைக் கொடுக்க முடியாது. அதற்குரிய சந்தர்ப்பத்தையும் கொடுக்க மாட்டோம். வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கும் சுமார் 7 இலட்சம் தமிழர்கள் புலிகளுக்குப் பல்வேறு வழிகளிலும் நிதியுதவி வழங்குகிறார்கள். இதனைத் தடுத்து நிறுத்துவதன் மூலம் புலிகளை பலவீனமடையச் செய்யமுடியும். அதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளது. வெளிநாட்டமைச்சர் பலநாட்டு அரசுகளுடனும், தொடர்பு கொண்டுள்ளார். இலங்கையின் நிலைமையை வெளிநாடுகள் புரிந்துகொள்ள ஆரம்பித்துள்ளன என்றும் அமைச்சர் ரதவத்த மேலும் தெரிவித்தார். (ஐ)

## இராணுவ ஜீப் திடீரென தீப்பற்றியது

கொழும்பு,செப்.26

கொழும்பு ஹவ்லொக் வீதியில் இயந்திரக் கோளாறு காரணமாக நேற்றுமுன்தினம் பகல் ஜீப்வண்டி ஒன்று தீப்பற்றிக் கொண்டது. ஜீப் வண்டி தீப்பிடித்துக் கொண்டதாகக் கேள்விப்பட்ட பம்பலப்பிட்டி பொலீஸார் இச்சம்பவத்தின் பின்னணிபற்றி அறிந்து கொள்வதற்காக அங்கு விரைந்து சென்றனர்.

தேர்தல் காலமானதாலும் புலிகளின் தாக்குதல் தலைநகரில் ஏற்படக்கூடும் என்ற அச்சம் இருந்ததினாலுமே பொலீஸார் விரைந்து சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

அங்கு சென்ற பின்னரே எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை என்பதும் இராணுவத்திற்கு சொந்தமான இந்த ஜீப்வண்டி இயந்திரக்கோளாறு காரணமாகத் தீப்பிடித்ததாகவும் அறிந்து கொண்டனர்.

பொலீஸார் செல்லும் முன்னரே தீயணைககப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)



சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தின் ஆறாவது பதவியேற்பு வைபவம் அண்மையில் இராமநாதன் நுண்கலைப்பீட கலையரங்கில் நடைபெற்றது. யாழ். றோட்டறிக்கழகத் தலைவர் றோட்டேரியன் அ.பஞ்சலிங்கம் மங்கள விளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைப்பதை படத்தில் காணலாம்.

# யுத்தத்தால் பிளவுபட்டுவிட்ட ஒரு நாட்டில் நல்ல எதிர்காலத்தை எதிர்பார்க்க முடியாது

### ரணில் கூறுகிறார்

கொழும்பு,செப்.26

"வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு புதிய அணுகுமுறை தேவை. பேச்சுவார்த்தையே நிரந்தரத் தீர்வொன்றுக்கு வழிவகுக்கும். பெரிய எண்ணிக்கையைக் கொண்ட இராணுவத்தாலும், நவீன ஆயுதங்களாலும் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஆகவே ஒக்ரோபர் 10 ஆம் திகதி ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாக்களிப்பதற்கு விரும்புவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்" என்று எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொழில் சார்ந்த நிபுணர்களுக்கு விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கின்றார்.

அவர் புத்திஜீவிகளுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இன்றைய உலக சந்தையில் அதிக பலமுள்ளவர்களே வெற்றி பெறமுடியும். வருங்காலத்து தேவைகளுக்கேற்ற வகையில் நாட்டைக் கட்டியெழுப்புவதிலும் உலகசந்தையை ஊடுருவுவதிலும், வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதிலும் இலங்கை எந்த அளவுக்கு பின்தங்கியுள்ளது என்பதனை சர்வதேச சஞ்சிகையான 'ஹெரல்ட் ரிபியூன்' அண்மைய கட்டுரையொன்றில் வெளிப்படுத்தியுள்ளது. தோமஸ் கிரம்டன் என்ற எழுத்தாளர் இலங்கையில் பொருளாதாரம் சீர்கெட்டு வருவதை அக்கட்டுரையில் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

வடக்கு - கிழக்கு யுத்தம் நாட்டை எந்த அளவுக்கு பாதித்துள்ளது என்பதனையும் அவர் விவரித்துள்ளார். 62,000 இலங்கையர்கள் யுத்தத்தில் மரணித்துள்ளனர். 6000 ஆக இருந்த இராணுவம் இன்று 150,000 ஆக உயர்ந்துள்ளது. இவர்கள் எல்லோருக்கும் ஊதியம் வழங்கப்பட வேண்டும் - என்றும் ரணில் தெரிவித்துள்ளார். (ஐ)

## முதன்மை ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.26

யாழ்ப்பாண வலயத்தைச் சேர்ந்த முதன்மை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## சேதமடைந்த ஆலயங்களுக்கு நஷ்டஈடு

யாழ்ப்பாணம்,செப்.26

யாழ்.மாவட்டத்தில் சேதமடைந்து புனரமைக்கப்படாதுள்ள சமய வழிபாட்டுத் தலங்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாண கலாசார அலுவல்கள் அமைச்சு நஷ்டஈடு வழங்கவுள்ளது.

இந்த நஷ்டஈட்டை வழங்குவதற்காக பிரதேச செயலகங்கள் ஊடாக சமய வழிபாட்டுத் தலங்களின் விவரங்களை அமைச்சு கோரியுள்ளது.

யாழ்.பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியிலுள்ள சேதமடைந்த-புனரமைக்கப்படாத - ஆலயங்களின் சேத விவர மதிப்பீட்டு அறிக்கையுடன் ஆலய நிர்வாகிகளை கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் கேட்டுள்ளார். (க)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 12 - 04 - 1964

இறப்பு 08 - 10 - 1999

**அமரர் கனகசபை - கவிதரன்**

(மக்கள் வங்கி ஊழியர் - நெல்லியடி)

ஆண்டொன்று சென்றாலும் ஐயா!
உன் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலா!
நீ, சென்ற இடம் தெரியவில்லை
தேடி வர வழியும் இல்லை
ஏங்கித் துடிக்கின்றோம்!

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்கள்.

*புலோலி தெற்கு,*
*புலோலி.*

(C/13069)

சித்தன்கேணி

**ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தானம்**

கேதாரகௌரி விரதம்

**07.10.2000 சனிக்கிழமை முதல் நடைபெற இருக்கும் விரத அனுஷ்டானத்தில் தினமும் மாலை 3 மணி முதல் அபிஷேகம், ஆராதனை, தொடர்ந்து அடியார்களால் லிங்கபூஜை என்பன நடைபெற உள்ளன. விரதம் அனுஷ்டிப்போர் பங்குபற்றி மங்களம் பெறுக!**

சுபம்

- தேவஸ்தானம்.

(78758)

## கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

எமது பீட மாணவன்

**து.துஷ்யந்தன்** (11ஆம் அணி) அவர்களின் அன்புத் தந்தை

**நாகலிங்கம் துரைராஜா**

அவர்களின் திடீர் மறைவைக்கேள்வியுற்று ஆழ்ந்த கவலை அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் நண்பனின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

**ஓம் சாந்தி!**

10ஆம் அணி மாணவர்கள் (2101),
விவசாயபீடம், யாழ்.பல்கலைக் கழகம்.

(78760)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

**திருமதி ஜெயலட்சுமி உதயகுமார்**

அவர்களின் அன்புக் கணவர்

**அமரர் வீரசிங்கம் உதயகுமார்**

அவர்களின் அகால மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/கோப்பாய் மகாவித்தியாலயம்.

(78761)

## மரண அறிவித்தல்

**திருமதி புஸ்பராணி சிவப்பிரகாசம்**

கொககுவில் பொற்பதி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி சிவப்பிரகாசம் 24.09.2000 ஞாயிறு அன்று இந்தியாவில் அகாலமரணமானார்.

அன்னார் பொன்னு சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் கணேஸ் ஜெயந்திரன் (பிரான்ஸ்), துசித்தா (சுவிஸ்), ஜெயக்குமார் (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயக்குமாரின் (சுவிஸ்) அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கந்தையா - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், ப.லலிதா, பொ.சிவராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், த.பரராஜசிங்கம், சி.றஜினி ஆகியோரின் மைத்துனியும், முரளிதரன், பிரதீபன் ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

பொ.சிவப்பிரகாசம் (கணவர்)

*பொற்பதி வீதி,*
*கொக்குவில்.*

(78766)

## சண்டிலிப்பாய்ப் பிரதேசத்தில்

# 60 சதவீதமான கர்ப்பிணிகளுக்கு

# இரத்தச்சோகை நோய்ப் பாதிப்பு!

சண்டிலிப்பாய், செப் 26

''எமது பிராந்தியத்தில் 60 சதவீதமான கர்ப்பிணித் தாய்மார் இரத்தச் சோகை (Anemia) யினால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். இதனால் பலவீனம், மூச்சுவாங்கல், இரத்தப்பற்றாக் குறை ஆகியன ஏற்படுகின்றன. குறைந்த செலவில் பெறக் கூடிய நல்ல போஷாக்கு மிக்க கீரை மற்றும் சத்துணவுகளை உட்கொள்வதன் மூலம் இந்த நிலையிலிருந்து மீட்சி பெற முடியும்.''

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகம் கடந்த 23 ஆம் திகதி சனிக்கிழமை நடத்திய போஷாக்கு கருத்தரங்கில் கலந்து கொண்டு 'பாலூட்டும் தாய்மாருக்கும் கர்பபிணித் தாய்மாருக்குமான உணவுத் தேவைகள்' என்ற தலைப்பில் உரையாற்றிய மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. கணேஸ்வரராஜா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பண்டத்தரிப்பு தையற் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற இக் கருத்தரங்குக்கு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமை வகித்தார்.

டாக்டர் கணேஸ்வரராஜா அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;-

கர்ப்பிணிகள் தாங்கள் வசிக்கும் பகுதியிலுள்ள கர்ப்பகால பராமரிப்பு நிலையங்களுக்கு—கிளினிக்குகளுக்கு — தவறாது செல்ல வேண்டும். இங்கு சுகாதாரக்கல்வி பற்றி அறிவுரைகள் வழங்கப்படுவதுடன் கர்ப்பிணிகளுக்கு சலரோகம், உயர் இரத்த அழுத்தம், குருதிப்பிரிவு ஒவ்வாமை ஆகியன பரிசோதனைகள் மூலம் கண்டறியப்படுகின்றன. கிளினிக்குகளில் சத்துக்குறைந்தவர்களுக்கு இரும்புச்சத்து, கல்சியம் போன்ற பல்வேறு குளிகைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் முப்பது சதவீதமான தாய்மார் தங்களுக்கு இக்கிளினிக்குகளில் இலவசமாக வழங்கப்படும் மருந்துக் குளிகைகளை முறையாகப் பாவிப்பதில்லை. சிலர் இதனை உட்கொள்ளாமல் கடைகளிலும் தனியார் பாமசிகளிலும் விலை உயர்ந்த குளிகைகளை வாங்கிப் பாவிப்பதையும் காணக் கூடியதாக உள்ளது.

பொருளாதார வசதி குறைந்த ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கும் கர்ப்பிணிகள் குறைந்த விலையில் கிடைக்கும் கீரை வகைகள், சிறு மீன்கள், நெத்தலிக்கருவாடு ஆகியனவற்றைப் பயன்படுத்த வேண்டும் இரத்தச்சோகை உள்ளவர்கள் இவற்றைப் பாவித்து நல்ல பயனைப் பெறலாம். தென்னிலங்கையில் கிளினிக்குகளில் 'திரிபோஷ' சத்து மா வழங்கப்பட்டு வருகின்றது ஆனால் இங்கு இது கிடைப்பதில்லை தவறான சமையல் முறைகளினாலும் உணவு வகைகளில் சத்துகள் இழக்கப்படுகின்றன. அரிசியில் தவிட்டுப்பிடிப்புள்ள கஞ்சியை சிலர் ஆடு, மாடுகளுக்கே கொடுக்கின்றனர். சில மூட நம்பிக்கைகளும் சத்துணவை பெறுவதற்கு தடையாக உள்ளன சோம்பல் தன்மையும் சிலரிடம் காணப்படுகின்றது கர்ப்பிணிகளுக்கு தினமும் 10 மணி நேர நித்திரை தேவை. ஓய்வும் இவர்களுக்கு அவசியம். அயடின் சேர்க்கப்பட்ட உப்பையே பயன்படுத்த வேண்டும். பைக்கற்றில் அடைக்கப்படாத தூள் உப்பு கடைகளில் விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தூள் உப்பு விற்கப்பட்டால் அதுபற்றி அப் பகுதி பொதுச் சுகாதார பரிசோதகருக்கு அறிவிக்க வேண்டும் — என்று தெரிவித்தார்.

பண்டத்தரிப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பொ. சிவரூபன் ''சுத்தமான நீரும் மலசல கூட பாவனையும்'' என்ற விடயம் பற்றியும், கீரிமலை விவசாய போதனாசிரியர் சி. விஜயரத்தினம் ''வீட்டுத் தோட்டச் செய்கை பற்றியும்'' உரையாற்றினார்கள்.

(ஐ-135)

## சண்டிலிப்பாய்ப் பிரதேசப் பிரிவில் தங்கியுள்ளோருக்கு 2000 ரூபா

### நேற்று முதல் வழங்கப்படுகிறது

நவாலி, செப். 26

அண்மையில் இடம்பெற்ற அனர்த்தங்களினால் தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்து சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருக்கும் 797 குடும்பங்களுக்கு இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு நேற்று முதல் சங்கானை மக்கள் வங்கிக் கிளையில் வைத்து வழங்கப்படுகின்றது.

இக் கொடுப்பனவுகள் 28 ஆம் திகதி வரை வழங்கப்படவுள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை ஜே — 143, ஜே — 147, ஜே — 139ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் —

நாளை புதன்கிழமை ஜே - 140 கிராம அலுவலர் பிரிவுக்கும் —

28 ஆம் திகதி வியாழக்கிழமை ஜே —145, ஜே — 148 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

இந்தக் கொடுப்பனவுகளை பெறவிருப்பவர்கள் தமது வங்கிப் புத்தகத்துடன் தத்தமது கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு தமது கொடுப்பனவை உறுதிப்படுத்திய பின்னரே வங்கிக்குச் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளனர் (க-100)

## மீண்டும் 'நான்' உளவியல் சஞ்சிகை

யாழ்ப்பாணம், செப். 26

இடப்பெயர்வினால் தடைப்பட்டிருந்த 'நான்' உளவியல் சஞ்சிகை மீண்டும் வெளிவரத் தொடங்கியுள்ளது. இலங்கையில் வெளிவரும் ஒரேயொரு தமிழ் உளவியல் சஞ்சிகை இதுவாகும்.

(க)

## நவாலிப் பகுதியில்

# தொடரும் திருட்டுச் சம்பவங்கள் மக்கள் மத்தியில் அச்ச நிலை

நவாலி, செப். 26

நவாலிப் பகுதியில் நள்ளிரவு வேளையில் தொடர்ந்து இடம் பெற்றுவரும் திருட்டுக்களினால் மக்கள் இரவு வேளையில் அச்சத்துடனும், விழிப்புடனும் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இப் பகுதியில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் பாரிய திராந்தித் துண்டுகள், இரும்புகளின் உதவியுடன் யன்னல் கம்பிகளை வளைத்து உள்ளே நுழைந்து திருட்டுக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு வேளை சின்னப்பா வீதியிலுள்ள செல்லத்துரை மகேந்திரன் என்பவரது வீட்டு யன்னல் கம்பிகளை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கு மேசை 'லாச்சியில்' வைக்கப்பட்டிருந்த ஐம்பத்தையாயிரம் ரூபா ரொக்கப் பணம், நகைகள் என்பவற்றை எடுத்தச்சென்றதுடன் பக்கத்து வீட்டிலிருந்த துவிச்சக்கர வண்டியை எடுத்துச் செல்ல முயன்ற போது வீட்டுக்காரர் சத்தமிட்டதனால் தாம் எடுத்து வந்த உலக்கையையும் கைவிட்டுவிட்டுச் தப்பிச் சென்றுள்ளனர்.

அதே இரவு சேச்சடியிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்த திருடர்கள் அங்கு நித்திரையிலிருந்த பெண்ணின் கழுத்தில் கையை வைத்த போது அப் பெண் கூச்சலிடவே தாம் கொண்டு வந்த திராந்தித் துண்டை விட்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதே இடத்தைச் சேர்ந்த நகுலேந்திரம் என்பவரது வீட்டுக்குச் சென்ற திருடர்கள் அவ் வீட்டு யன்னல் கம்பிகளை வளைத்து பெறுமதி மிக்க தொலைக்காட்சிப் பெட்டியினை எடுத்துச்சென்றுள்ளனர்.

(க-100)

## விநியோகம்

சண்டிலிப்பாய், செப். 26

பட்டினிக்கு எதிரான நிறுவனம் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவில் 500 பயனாளிகளுக்கு காலபோக நெல் விதைப்பினை மேற்கொள்ளும் பொருட்டு புதிய திருந்திய இனவிதை நெல்லை அண்மையில் வழங்கியுள்ளது.

இவர்களுக்கு விவசாய உபகரணங்களும் இந் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

இப் பயனாளிகளுக்கு இதற்கான தொழில் நுட்ப அறிவுரைகளை கீரிமலை கமநலச் சேவை கேந்திர நிலையப் பிரிவு விவசாய போதனாசிரியர் சி விஜயரத்தினம் கமத்தொழில் திணைக்கள பாடவிடய உத்தியோகத்தர்கள் எஸ். நல்லதம்பி, கே பொன்னையா ஆகியோர் வழங்கிவருகின்றனர். ஐ-135)

## நல்லெண்ணெய் தொழிற்சாலை நிறுவப்படும்

பிரான்பற்று கிராம அபிவிருத்திச் சங்கம் நல்லெண்ணெய் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது

திருகோணமலையிலுள்ள வடக்கு—கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித்திணைக்களம் இந் தொழிற்சாலைக்கு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க. ஸ்ரீபதி தெரிவித்தார்.

(ஐ-135)

# செய்திக் கொத்து

## காணி கொள்வனவு செய்ய ஏற்பாடு

கோப்பாய், செப். 26

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கென 15 பரப்புக் காணியை கொள்வனவு செய்வதற்கு பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது

பாடசாலையின் எல்லையுடன் வடக்குத் திசையில் காணப்படும் இக்காணியை கொள்வனவு செய்வதன் மூலம் இடப்பற்றாக்குறை நீங்குவதுடன் விவசாய நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(க-72)

## வீதி திருத்தம்

நெடுந்தீவு, செப். 26

அனலைதீவு பிரதான வீதித்திருத்த வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. கடந்த முப்பது வருடங்களின் பின் இந்த வீதி திருத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

(க-111)

## திருத்தப்படாத வீதி

புன்னாலைக்கட்டுவன்

செப். 26

புன்னாலைக்கட்டுவன் வைத்தியசாலை வீதி நீண்டகாலமாகத்திருத்தப்படாமல் உள்ளது. தற்சமயம் பெய்யும் மழையினால் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது. குண்டும் குழியுமாக காணப்படும் இவ் வீதியில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதனால் போக்கு வரத்துச் செய்ய முடியாமல் பொதுமக்கள் சிரமப்படுகின்றனர்.

(க-133)

## வீதிகள் சீர்கேடு

சண்டிலிப்பாய், செப். 26

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வீதி நீண்டகால மாகத் திருத்தப்படாமல் உள்ளது.

இதேவேளை—

பண்டத்தரிப்பு கீரிமலை வீதி கணிக்கட்டுஒழுங்கையும் நீண்ட காலமாகத் திருத்தப்படவில்லை. தற்போது பெய்து வரும் மழையினால் அந்த வீதி சேறும் சகதியுமாகக்காணப்படுகின்றது. இவ்வீதிகளை விரைவில் திருத்தி உதவுமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கமும் வலி. தென்மேற்கு பிரதேச சபையினரிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ-135)

## உதவிப் பணக் கொடுப்பனவு

தென்மராட்சி, செப். 26

வடமராட்சிப் பிரதேசத்தில் தங்கியுள்ள தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பொது சன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் மற்றும் காசநோய், புற்றுநோய் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கான ஜூலை, ஓகஸ்ட், செப்ரம்பர்மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது

(க-117)

## மரநாய்கள் தொல்லை

புன்னாலைக் கட்டுவன், செப். 26

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் மரநாய்களின் தொல்லை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு தினமும் இரவு வேளைகளில் வீடுகளில் உள்ள கோழிகளை மரநாய்கள் பிடித்துச் செல்வதால் மக்கள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.

(க-133)

## சீரடி பாபாவின் சரித்திரம் வாசிப்பு

யாழ்ப்பாணம், செப்.26

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீசத்திய சாயிசேவா நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை முதல் எதிர் வரும் 27 ஆம் திகதி வரையும் சீரடிபாபாவின் பிறந்த தினத்தை ஒட்டி அவரது சரித்திரம் வாசிக்கப்படுகின்றது

இறுதி நாளன்று காலை 9 - 30 மணி தொடக்கம் விசேட பூசை, ஆராதனை, வழிபாடுகள் நடைபெறவுள்ளன. (க-30)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 26

யாழ்ப்பாணம் நடேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

(க)

## பயிர்ச்செய்கை ஆரம்பம்

புன்னாலைக்கட்டுவன்,

செப். 26

தற்போது பெய்து வரும் பருவ மழையைத் தொடர்ந்து புன்னாலைக் கட்டுவன், ஈவினை, குப்பிளான், ஏழாலை, அச்செழு ஆகிய பிரதேசங்களில் பயிர்ச் செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெண்டி, புடோல், பாகல், பூசணி, பயற்றை, கத்தரி போன்ற மரக்கறிப் பயிர்களும் மரவள்ளி, இராசவள்ளி, கருணைக் கிழங்கு மற்றும் வெங்காயம், கரட், கோவா, லீக்ஸ் போன்ற பயிர்களும் பயிரிடப்படுகின்றன.

(க-133)

## மழையினால் இடம்பெயர்ந்தோர் அவதி

புன்னாலைக்கட்டுவன்,

செப். 26

தற்போது பெய்து வரும் மழையினால் தென்மராட்சியில் இருந்து இடம் பெயர்ந்த குடும்பங்கள் சிரமங்கள் பலவற்றை எதிர் நோக்கி வருகின்றன.

பொதுவாக அகதி முகாம்களில் தற்காலிக கொட்டகைகளில் வாழ்ந்து வரும் மக்களே இவ்வாறு சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்

தமது உடைமைகளைப் பேணுதல், நித்திரை கொள்ளுதல், உணவு சமைத்தல் போன்ற தமது அன்றாட தேவைகளையே செய்ய முடியாமல் இம் மக்கள் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

மேலும் விறகுப் பிரச்சினையையும் இம் மக்கள் எதிர்நோக்குகின்றனர்

(க-133)

# அமைய சுகாதாரத் தொழிலாளர் நியமனம் வழங்க பட்டியல் வந்தது

சண்டிலிப்பாய், செப். 26

யாழ். மாவட்ட அரசாங்க வைத்தியசாலைகளிலும் மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களிலும் அமைய சுகாதாரத் தொழிலாளர்களாக நியமிப்பதற்கு வடக்கு — கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் பெயர்ப் பட்டியல் ஒன்று யாழ். சுகாதாரத் திணைக்களத்திற்கு கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை அடுத்த மாதம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

யாழ். மாவட்டத்தில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் சுகாதாரத் தொண்டர்களாக 500-க்கும் மேற்பட்டவர்கள் கடந்த ஏழு, எட்டு வருடங்களுக்கு மேலாக வேதனம் எதுவுமின்றிப் பணியாற்றி வருகின்றனர். கடந்த காலங்களில் அமைய சுகாதாரத் தொழிலாளர்கள் நியமனம் செய்யப்படும்போது இவர்களுக்கே முன்னுரிமை கொடுப்பது வழக்கமாக இருந்து வந்தது. இம்முறை தாங்கள் புறகணிக்கப்பட்டுள்ளது மிகவும் கவலையளிப்பதாக நீண்ட காலம் கடமையாற்றி வரும் சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்தனர்.

(ஐ-135)


BEACON STUDY CENTRE

VATHIRY, KARAVEDDY.

A/L 2000

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான

கணித/விஞ்ஞான மீட்டல் வகுப்புக்கள்

PHY: திரு. குமரன்
(வியாழன் பி.ப. 1.00 மணி ப.நே.)
CHE: திரு. சண்முகசுந்தரம்
COM. MATHS: திரு. A. பத்மநாதன்
(திங்கள் மு.ப. 10.00 மணி ப.நே.)
திரு. அருளானந்தம்
BIO: திரு. கங்காதரன்

ஆரம்பம்: 28-09-2000 (வியாழன்)
பி.ப. 1.00 மணி

(78747)


# ஆங்கில தகுதிகாண் பரீட்சை

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பிரிவு புகுமுக மாணவர்களுக்கான ஆங்கில தகுதிகாண் பரீட்சை ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும்.

(ஐ-10-ரி)


# சென். ஜோன் அன்புலன்ஸ் தேசிய பாசறை 2000

யாழ். மத்திய மாவட்டத்திலிருந்து மார்கழி மாதம் அவிசாவளையில் நடைபெறும் மாவட்டங்களுக்கிடையிலான போட்டிகளுக்கு வெளிவாரி, கடேற்ஸ் (பாடசாலை) KITTIES, என 5 ஆண்கள், 5 பெண்கள் என்ற ரீதியில் 30 பேரும், 06 உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளத் தலைமையகம் அனுமதியளித்துள்ளது. குதிரைச் சவாரி, யானையேறுதல், மலையேறுதல், ஈருருளி கழற்றிப் பூட்டுதல் போன்ற பல தனிநபர் போட்டிகளுமுண்டு. திறமை, அர்ப்பணிப்பு, தெரிவுக்கு இடமுண்டு. உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ். பெரியோர்களே! வெற்றியோடு வர உங்கள் ஆலோசனைகள், ஆக்கங்கள், ஆதரவுகள் எங்களுக்குத் தேவை!

ஆ. சி. நடராசா (அதிபர்),
தலைவர்,
பெற்றோர் குழுமச்சபை.

க. அருந்தவராஜா
18/4-1, சீனியர் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

யாழ். மத்திய மாவட்டம்.

(78753)



# கண்ணீர்க் காணிக்கைகள்

கொக்குவில் இந்துக்கல்லூரியில் கற்கும் எமது சகமாணவி

சுஜித்தா

அவர்களின் அருமைத் தந்தையார்

நாகலிங்கம் துரைராஜா

அவர்களின் திடீர் மறைவையிட்டு ஆழ்ந்த துயர் கொள்வதுடன் அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:-

உயிரியல் பிரிவு (2001) மாணவர்கள்,
கொக்குவில் இந்துக்கல்லூரி.

(78754)



# கண்ணீர் அஞ்சலி

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின்
முதலாம் வருட மாணவி
செல்வி சகுந்தலாதேவி சின்னமணி
அவர்களின்
அன்புத் தாயார்

திருமதி தங்கச்சிப்பிள்ளை சின்னமணி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

பீடாதிபதி, விரிவுரையாளர்கள்,
மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

(78746)


# திருடர் கோஷ்டியைச் சேர்ந்த ஐவர் கைதாகி விசாரணையில்

சண்டிலிப்பாய், செப். 26

சித்தன்கேணி மற்றும் வட்டு. கிழக்குப் பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் திருட்டு, சைக்கிள் திருட்டு ஆகிய திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் ஐந்து பேரை சுன்னாகம் பொலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கொடுத்த தகவலை அடுத்து வட்டு கிழக்கில் வீடொன்றிலிருந்து திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டு சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

சித்தன்கேணியிலுள்ள கிராம அலுவலர் ஒருவரின் வீட்டிலிருந்து இரு மாதங்களுக்கு முன்னர் இரவு வேளையில் திருட்டுப் போன மூன்று சைக்கிள்களையும் திருடிய திருட்டுக் கோஷ்டி இனம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இத்திருட்டுக் கோஷ்டியில் இருவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், ஒருவர் தேடப்பட்டு வருவதாகவும் சுன்னாகம் பொலீஸ் வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

# தேர்தல் வேளை அத்தியாவசிய சேவைகளைச் சீராக்க முடிவு

யாழ்ப்பாணம், செப். 26

குடாநாட்டில் தேர்தல் காலத்தில் போக்குவரத்து, மின்சாரம், தொலைபேசி, தபால் சேவைகளைச் சீராக நடத்துவது என்று யாழ். நகரிலுள்ள 51 ஆவது படையணி அலுவலகத்தில் நடைபெற்ற தேர்தல் ஒழுங்கு தொடர்பான கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கடந்த வெள்ளியன்று இக்கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் 51 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர, யாழ் அரசாங்க அதிபர் க.சண்முகநாதன், உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். நடராஜா, வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம், 'ரெலிக்கொம்' நிறுவன வடபிராந்திய பொறியியலாளர். அன்ரன் ராஜா, பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் ஏ. கே. சிவஞானசுந்தரம் ஆகியோருடன் மின்சாரசபை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

சீரான மின்சார விநியோகத்துக்கு இரண்டு பெரிய ஜெனரேட்டர்களைப் பெற்றுத் தருவதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-5-10-ரி)

# ஹெலி விபத்துக் குறித்து விசாரிக்க மன்னிப்புச் சபையிடம் கோரிக்கை

## வடக்கு முஸ்லிம் அமைப்பு கடிதம்

அமைச்சர் அஷ்ரப்பையும் 14 பேரையும் பலி கொண்ட விமான விபத்து குறித்து உரிய முறையில் விசாரணை நடத்தி உண்மையைக் கண்டறியுமாறு வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு சர்வதேச மன்னிப்புச் சபையிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமைப்பின் சார்பில் அதன் தலைவர் எம். எம். அப்துல் ரஹ்மான் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 16-09-2000 அன்று இலங்கையின் கேகாலை மாவட்டத்தில் அரநாயக்க என்னுமிடத்தில் ஏற்பட்ட விமான விபத்தில் அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான எம். எச். எம். அஷ்ரப் அவர்களும் இன்னும் 14 பேரும் கொல்லப்பட்டனர்.

இந்த விபத்துக்கான காரணங்கள் இதுவரை சரியாக அறியப்படவில்லை. இது தொடர்பாக புலன் விசாரணை மேற்கொண்டு வரும் விமானப் படையினரும் ஏனைய குழுக்களும் சரியான காரணங்களைக் கண்டறியவில்லை. குறிப்பாக விமானத்தின் கறுப்புப் பெட்டியோ உரையாடல்களைப் பதிவு செய்திருந்த ஒலியிழை நாடாவோ கண்டுபிடிக்கப்படவுமில்லை.

இந்த விபத்தில் கொல்லப்பட்ட அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான எம்.எச்.எம். அஷ்ரப் இந்தக் காலப்பகுதியில் பல இனவாத சக்திகளின் அச்சுறுத்தலுக்கு உட்பட்டிருந்ததும் விபத்துத் தொடர்பான சந்தேகங்களை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

இவரது எதிரிகள் பல கட்சிகளிலும் பயங்கரவாத இயக்கங்களிலும் இருந்துள்ளனர். அத்தோடு இவர் சார்ந்திருந்த ஆளும் கட்சியில் கூட சில இனவாத எதிரிகள் இருந்து வந்ததும் கவனிக்கப்பட வேண்டியது.

விபத்துக்குள்ளான ஹெலிகொப்டர் இலங்கை விமானப் படைக்குச் சொந்தமானது. எனவே அரசாங்கத் தரப்பில் ஏதும் சதித்திட்டங்கள் தீட்டப்படுவதென்றாலும் அதுவொன்றும் கடினமான காரியமல்ல. வேண்டுமென்றே விமானத்தில் குண்டுகளைப் பொருத்தி விடவும் அல்லது கோளாறுகளை உண்டுபண்ணவும் இங்கே சந்தர்ப்பங்கள் உண்டு.

இந்த விபத்து நடந்த இடத்தில் நேரடியாக இதனை அவதானித்த மக்களின் கருத்தின் படி ஆகாயத்தில் பல வெடிச்சத்தங்களுடன் விமானம் வீழ்ந்ததாகவும் வழமையாக விமானம் பயணம் செய்ய வேண்டிய பாதையை விட்டு வேறு திசை நோக்கியே பயணம் செய்ததாகவும் அறியக் கிடக்கின்றது.

தாழப்பறந்த ஹெலிகொப்டர் வெடித்துச் சிதறிய விதத்தைப் பார்த்தால் இது ஹெலிகொப்டரினுள்ளே செய்யப்பட்ட ஏதோ ஒரு சதியாக இருக்கலாம் என்றே பலத்த சந்தேகங்கள் எழுகின்றன.

இங்கு நடத்தப்படுகின்ற விசாரணைகள் விமானம் மலையொன்றில் மோதுண்டு நிகழ்ந்ததாகக் கூறுகின்றன. விசாரணைகள் தொடர்பில் நிலவுகின்ற அதிருப்தி காரணமாக இவற்றை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

இலங்கையில் இனவாதிகளுக்கும், முஸ்லிம்களுக்கெதிரான போக்கைக் கொண்டுள்ள சில தீவிரவாத சக்திகளுக்கும் மாபெரும் சவாலாக அமைந்திருந்த சிறுபான்மை முஸ்லிம் இனத்தின் தலைவரும், அமைச்சருமான அஷ்ரபின் மரணம் பெரும்பாலும் ஒரு சதியாகவே இருக்குமென்று இங்குள்ள முஸ்லிம்களாலும் மனிதாபிமானமுள்ளவர்களாலும் உறுதியாக நம்பப்படுகிறது.

எனவே உங்களது சர்வதேச மன்னிப்புச்சபை இது தொடர்பான பூரண விசாரணைகளுக்கு வழி சமைப்பதோடு வெளிநாடுகளில் பிரசித்திபெற்ற இன்டர்போல் போன்ற அமைப்புகளை இப் புலன்விசாரணைகளில் ஈடுபடுத்த ஆவண செய்யுமாறு மிக வினயமாகக் கேட்டுக்கொள்கின்றோம் —

நீதியையும் உண்மையையும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் இலங்கையின் சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தின் சார்பில் விடுக்கப்படும் இந்த உருக்கமான மனுவினை தங்கள் சபை மிக விரைவாக கவனத்தில் எடுக்கும் என்று ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றோம்.

(ஐ-4)


உடன் விற்பனைக்கு

SONY WEGA
கலர் T.V. 2199
(JAPAN) V.C.R.S.L V, ED 4
புதியது
உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
மயூரன் ஸ்ரோர்ஸ்
வழக்கம்பரை, சுழிபுரம்

(78745)

# வேலணை பிரதேச சபை

"செவிகைப்பச் சொற் பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக் கீழ் தாங்கும் உலகு"

## ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

### கையேற்ற பின்பு

## நடைபெற்ற வேலைகள்



**மக்களால் தெரிவு செய்யப்பட்ட எமது கட்சியானது எமது செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வழி நடத்தலின் மூலமும் யாழ்.மாவட்டப் பிரதம அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கே.வி.குகேந்திரன் (ஜெகன்) அவர்களின் முயற்சியாலும் எமது கட்சியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் கட்சி உறுப்பினர்களினதும் ஆதரவுடன் மக்களின் பெரும் ஒத்துழைப்பினாலும் உள்ளூராட்சி சபைகள் மூலம் மக்களின் தேவைகளை இனங்கண்டு சேவையாற்றி வருகின்றோம். இக்கட்டான பல அசாதாரண சூழ்நிலை மத்தியிலும் மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற உயர் வாக்கிற்கு இணங்க இரவு பகல் எனக்கூட பாராது எமது சேவையினை வழங்கி வருவதை தாங்கள் அறிவீர்கள். இந்த வகையில் எமது சபை மூலம் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்களை தங்கள் முன் சமர்ப்பிப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகின்றோம்.**

### பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி - 1998
### (935,000 ரூபா)

இந்நிதியிலிருந்து பிரதேச சபையின் எல்லைக்குட்டபட்ட ஆறு(6) சனசமூக நிலையங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டதோடு ஒரு தார் வீதியும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

### விசேட மூலதன நிதி - 1998 (30 இலட்சம்)

இந்நிதியிலிருந்து மரமுந்திரிகைச் செய்கை, தென்னம் நாற்றுக்கள் விநியோகம் அத்தோடு 14 சனசமூக நிலையங்கள் புனரமைப்புச் செய்ததோடு அவற்றுக்குத் தளபாடங்கள் மற்றும் முன்பள்ளி பாலர் பாடசாலைகளுக்கு வேண்டிய உபகரணங்கள் என்பனவும் வழங்கப்பட்டன. இவற்றுடன் 3 சந்தைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டதுடன் சனசமூக நிலையங் களுக்கான பெறுமதியான நூல்கள் என்பனவும் வழங்கப்பட்டன. பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திற்கென அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் என்பனவும் இந்நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

### பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி - 1998
### (325,000 ரூபா)

இந்நிதியிலிருந்து 4 வீதிகள் திருத்தம் செய்யப்பட்டன. அத்தோடு இரண்டு சந்தைகள் புனரமைப்புச் செய்யப்பட்டதோடு பிரதேச சபைத் தேவைக்கென ஒரு நாய்பிடி வண்டிலும் கொள்வனவு செய்யப்பட்டது.

### சபை நிதி - 1998 (553,000 ரூபா)

இந்நிதியிலிருந்து பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளின் வைத்தியசேவை, குடிநீர் சேவை, சுகாதார சேவை என்பன நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் ஒரு வீதியும் புனரமைப்புச் செய்யப்பட்டது. அத்தோடு பிரதேச சபையின் பொதுநூலகக் கட்டடத் திருத்தம் மற்றும் மின்னிணைப்பு என்பனவும் மேற்கொள்ளப்பட்டன.

### வடமாகாண மீள் குடியேற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு
### அதிகார சபை நிதி ஒதுக்கீடு (றான்) 1998 (9 இலட்சம் ரூபா)

பிரதேச சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பகுதிகளின் குழாய்கள் மூலமான நீர் விநியோகத் திட்டம் பொதுக் கிணறுகள் திருத்தம், ஆயுர்வேத மருந்தகம் திருத்தம், ஆயுர்வேத மருந்தகங்களுக்கான தளபாடங்கள், உபகரணங்கள் கொள்வனவு என்பன இந்நிதியிலிருந்து செய்யப்பட்டதோடு ஒரு தார் வீதியும் புனரமைப்புச் செய்யப்பட்டது.

### பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி - 1999
### (575,000 ரூபா)

இந்நிதியிலிருந்து 5 வீதிகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. இரண்டு சனசமூக நிலையங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டதோடு கொல்களம் ஒன்றும் அமைக்கப்பட்டது. அத்தோடு பிரதேசசபைப் பாவனைக்கென குப்பை வண்டியொன்றும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

### வடமாகாண மீள் குடியேற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு
### அதிகார சபை - 1999 (466,192,66)

பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 4 பொதுக்கிணறுகள் புனரமைப்புச் செய்யப்பட்டன. வேலணை தொடர் கடை திருத்தம் செய்யப்பட்டு மேலதிகமாக இரு கடைகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

### விசேட நிதி - 1999 (9 இலட்சம்)

இந்நிதியிலிருந்து 6 சனசமூக நிலையங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டன. 2 சன சமூக நிலையங்களுக்கு தலா தளபாடம், தொலைக்காட்சிப் பெட்டி என்பன வழங்கப்பட்ட தோடு பவுசர் தரிப்பிடமொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

### பிரமாண அடிப்படையிலான மூலதன நிதி - 2000
### 10 இலட்சம்

| | | |
|---|---|---|
| 01. | குடலைப்பே வீதி திருத்தம் - நயினாதீவு | 250,000.00 |
| 02. | மலசலகூடம் திருத்தம் - புங்குடுதீவு உப அலுவலகம் | 50,000.00 |
| 03. | விதானையார் வீதி திருத்தம் - வேலணை | 250,000.00 |
| 04. | திருவள்ளுவர் ச.ச.நிலையம் புனரமைப்பு - சரவணை | 50,000.00 |
| 05. | சுடலை மடம் அமைத்தல் - சரவணை | 150,000.00 |
| 06. | பாலர் பாடசாலை அமைத்தல் - அம்பிகை நகர் | 250,000.00 |

### சபை நிதி - 2000
### (77,000)

| | | |
|---|---|---|
| 01. | பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் கணனி அறையினை நிர்மாணித்தல் | 41,000.00 |
| 02. | மாட்டு உருளை மீளத் திருத்தி அமைத்தல் | 36,000.00 |

### வடமாகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு
### அதிகார சபை - 2000
### RRAN - 3,000,000

| | | |
|---|---|---|
| 01. | திறந்த வெளி அரங்கு புனரமைத்தல் - வேலணை | 225,000.00 |
| 02. | நீர் விநியோக வீதி திருத்தம் - வேலணை | 250,000.00 |
| 03. | அம்மன் வீதி திருத்தம் - வேலணை | 200,000.00 |
| 04. | வைரவர் வீதி திருத்தம் - வேலணை | 175,000.00 |
| 05. | ஐக்கிய உதயமகால் ச.ச.நிலையம் அமைத்தல் பகுதி 2 - வேலணை | 50,000.00 |
| 06. | சிற்பனை வீதி திருத்தம் - வேலணை | 250,000.00 |
| 07. | நாச்சிமார் பொதுக் கிணறு திருத்தம் - வேலணை | 25,000.00 |
| 08. | சிறி முருகன் ச.ச.நிலையத்திற்கு தளபாடம் வழங்கல் - வேலணை | 25,000.00 |
| 09. | புங்குடுதீவு உப அலுவலக கட்டடம் திருத்தம் - புங்குடுதீவு | 200,000.00 |
| 10. | சுடலை மடம் அமைத்தல் - புங்குடுதீவு | 150,000.00 |
| 11. | சுடலை மடம் திருத்தம் - நயினாதீவு | 75,000.00 |
| 12. | யாத்திரிகர் மடம் புனரமைப்பு - நயினாதீவு | 225,000.00 |
| 13. | சித்தி விநாயகர் ச.ச.நிலையம் அமைத்தல் - புங்குடுதீவு | 150,000.00 |
| 14. | ஆலம்புலம் வீதி திருத்தம் - நயினாதீவு | 250,000.00 |
| 15. | தீர்த்தக்கரை அந்தியேட்டி மடம் புனரமைப்பு - நயினாதீவு | 150,000.00 |
| 16. | அல்லைப்பிட்டி கடற்கரை வீதி திருத்தம் | 200,000.00 |
| 17. | நூல்கள் அன்பளிப்பு | 100,000.00 |
| 18. | சாட்டி புனித சிந்தாத்திரை மாதா ஆலயச் சூழலில் பொது மலசலகூடம் அமைத்தல் - வேலணை | 200,000.00 |
| 19. | நசெரத் ச.ச.நிலையம் அமைத்தல் பகுதி 2 - புங்குடுதீவு | 25,000.00 |
| 20. | ஐயனார் ச.ச.நிலையம் திருத்தம் - வேலணை | 75,000.00 |

**(01) பயணிகள் தங்கும் இடம் அமைத்தல் - குறிகாட்டுவான் - (10 இலட்சம்)**

குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து ஏனைய தீவுகளுக்குச் செல்லும் பயணிகள் நலன் கருதியே, அவர்கள் தங்கி இளைப்பாற வசதியாக இக்கட்டடம் அமைக்கப்படவுள்ளது. முக்கியமாக நயினை நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த உயர் திருவிழாவை முன்னிட்டு அம்பாளைத் தரிசிக்கவரும் பெருந்திரளான மக்கள் தங்கி இளைப்பாறி ஆறுதலாகப் பயணம் செய்வதற்கு ஏற்றவாறே இக்கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

**(02) பயணிகள் படகு கொள்வனவு - குறிகாட்டுவான் நயினாதீவு (75 இலட்சம்)**

நயினாதீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையிலான கடற் போக்குவரத்திற்கு நாளொன்றுக்கு ஒரு படகே சேவையில் ஈடுபடுத்தப்படுவதாலும் அப்படகில் பெருந் திரளான மக்களை ஏற்ற முடியாமையாலும் மக்கள் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே பயணத்தினை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் இச் சிரமத்தினைப் போக்கவே எம்மால் சுமார் 100 இற்கும் மேற்பட்டவர்கள் பயணம் செய்யக்கூடிய சொகுசுப்படகு ஒன்று கொள்வனவு செய்யப்படவுள்ளது.

**(03) பெட்டியுடன் கூடிய உளவு இயந்திரம், கண்ணாடி நாரிலான தண்ணீர் தாங்கிகள் நீர் இறைக்கும் இயந்திரம் என்பன கொள்வனவு - நயினாதீவு - (16 இலட்சம்)**

நயினாதீவுப் பகுதியில் நிலவும் குடி தண்ணீர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் பொருட்டே மேற்படி இயந்திர உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

### குடிதண்ணீர் விநியோக சேவை

நாம் சபையினைப் பொறுப்பேற்ற பின்னர் எமது கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் முயற்சியால் யுனிசெவ் அமைப்பினால் வழங்கப்பட்ட குடிதண்ணீர்ப் பவுசர் ஒன்று யாழ். மாவட்ட அரச அதிபரினால் எமது சபைக்குக் கையளிக்கப்பட்ட பின்னர் எமது பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்து வருகின்றோம்.

## 'எம் கடன் பணிசெய்து கிடப்பதே'

**இளையதம்பி நவரத்தினம்**
உபதலைவர்.
வேலணை பிரதேச சபை.

இவ்வண்ணம் மக்கள் சேவையிலுள்ள
**ந.கருணாகரகுருமூர்த்தி** (ஜே.பி.யு.எம்)
(வேலணை பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளரும்,
வேலணைப் பிரதேச சபைத் தலைவரும்)

C/13074

# ரவூப் ஹக்கீம் சத்தியப் பிரமாண வைபவம் இறுதி நேரம் ஒத்திவைப்பு

## விமானம் 5 மணி நேரம் தாமதிப்பு

முஸ்லிம் காங்கிரஸின் இணைத் தலைவரான ரவூப் ஹக்கீம் துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சராக ஜனாதிபதி முன்னிலையில் நேற்றுச் சத்தியப்பிரமானம் செய்யவிருந்த வைபவம் இறுதி நேரத்தில் பிற்போடப்பட்டது.

தமது மனைவியுடன் மக்கா சென்றிருந்த ஹக்கீம் நாடு திரும்ப இருந்த விமானம் ஐந்து மணி நேரம் தாமதமானதாலேயே இந்த வைபவம் இடம்பெறவில்லை என்று முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வைபவத்தை இன்று நடத்த மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானா நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

எனினும் பண்டாரநாயக்காவின் சிரார்த்தினம் இன்று நடைபெறுவதால் அதில் ஜனாதிபதி கலந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் இந்தப் பதவியேற்பு வைபவம் மேலும் பிற்போடப்படலாம் என மற்றொரு தகவல் தெரிவித்தது.(இ-க-3)

### கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நண்பகல் 12.30 மணிமுதல் 4.30 மணிவரை இடம்பெறும்.

★ கப்பல் செல்லும் தினங்களான செவ்வாய், வியாழன் தவிர்ந்த ஏனைய தினங்களில் காலையில் பயணப்பத்திரம் வழங்கும் பணிகள் இடம்பெறும்.

★ செவ்வாய்க்கிழமை கப்பலுக்கு சனி, திங்கள்கிழமைகளிலும், வியாழக்கிழமை கப்பலுக்கு செவ்வாய், புதன்கிழமைகளிலும் பயணச் சீட்டுக்கள் வழங்கப்படும்.

★ 65 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்கள், ஊனமுற்றோர், கர்ப்பிணிகள் ஆகியோர் பயண ஏற்பாடுகளுக்காக சிவில் அலுவலகத்துக்கு வரத்தேவையில்லை. அவர்களின் கிட்டிய உறவினர் மூலம் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றைச் சமர்ப்பித்துப் பயணச் சீட்டைப் பெறலாம். (இ-3)

### மாத்தளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளை நகரில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைந்து செல்லுமாறு பொலீஸார் கோரினர். எனினும் அவர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து பொலீஸார் கண்ணீர்புகைக் குண்டுகளை வீசியதுடன் துப்பாக்கிப்பிரயோகமும் செய்தனர். இதில் மூவர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஜே.வி.பி. அமைப்பின் வேட்பாளர்கள் இருவர் கைதாகி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (இ-3-ரி)

# சாவகச்சேரியில் மோட்டார் தாக்குதல்

கொழும்பு, செப்.26

சாவகச்சேரியில் நிலைகொண்டுள்ள படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று மோட்டார் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் படையினர் தரப்பில் இருவர் காயமடைந்தனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்றுத் தகவல் வெளியிட்டுள்ளது.

செம்மணி கிழக்குப் பகுதியில் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் நாவற்குழி நோக்கிச் சென்றுகொண்டிருந்த விடுதலைப்புலிகளின் அணி ஒன்றுடன் மோதினர் எனவும்-

படையினர் இந்த மோதலில் இயந்திரத் துப்பாக்கிகள் மற்றும் மோட்டார்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தினர் எனவும் இந்த நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் 15 பேர் உயிரிழந்தோ அல்லது காயமடைந்தோ இருக்கலாம் எனவும் படையினர் தரப்பில் 4 பேர் காயமடைந்தனர் எனவும் - விசேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது. (இ-7)

### சுட்டுக்கொலை

மட்டக்களப்பு,செப்.26

மட்டக்களப்பு மாவட்டம் - கல்குடாப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு புளொட் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். பாலையா தேவராஜன் (வயது 24) என்பவரே உயிரிழந்தவராவார். (இ-7-21)

# இனங்காணப்படாத 3 சடலங்கள் அடக்கம்

யாழ்ப்பாணம்,செப்.26

யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த இனம் காணப்படாத மூன்று சடலங்கள் நேற்று அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டன.

கிளாலி, சாவகச்சேரி, உரும்பிராய் பகுதிகளில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் இவர்கள் உயிரிழந்ததாகத் தெரிவித்து பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் இந்த சடலங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

சடலங்கள் இனங்காணப்படாததை அடுத்து பரிசோதனையின் பின் நேற்று அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது. (இ-139)

### திருமலைப் பகுதியில் குண்டுவீச்சு

திருகோணமலை மாவட்டத்தில் நகரில் இருந்து 12 கிலோ மீற்றர் தூரத்தில அமைந்துள்ள இறால்குழி என்னும் இடத்தில் நேற்றுப் பிற்பகல் 'கிபிர்' விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

இத்தாக்குதலால் சமீபமாக உள்ள கிண்ணியா, மூதூர்ப் பகுதிகள் அதிர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.(இ-3-150)

### மரக்கன்றுகள் விநியோகம்

வலி வடக்கு,செப்.26

அரச மரக் கூட்டுத்தாபனத்தால் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கன்றுகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

மிகவும் பயனுள்ளதும் பொது இடங்களில் நாட்டக் கூடியதுமான மரக்கன்றுகள் பொது அமைப்புகளுக்கு குறைந்த கட்டணத்தில் விநியோகம் செய்யப்படுகின்றன.

மரக்கன்றுகள் தேவையானவர்கள நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள கூட்டுத்தாபனத்தின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என பிரதேச செயலகங்களுக்கும் அறிவுறுத்தல் அனுப்பப்பட்டுள்ளது.(3-86)

## கொழும்பு வாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்படும் என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் கொழும்பு நகரில் தாக்குதல்களை நடத்துவதற்கு, விடுதலைப்புலிகளின் தற்கொலைக் குண்டுதாரிகள் ஊடுருவியுள்ளனர் என்ற சந்தேகத்தை அடுத்து -

இப்போது கொழும்பு நகரில் தமிழர் வாழும் பகுதிகள் அடிக்கடி சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக தமிழர்கள் தங்கியிருக்கும் லொட்ஜ்களில் திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன; கைதுகளும் நடைபெறுகின்றன.

கொழும்பு மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபர் போதி லியனகே கடந்த வெள்ளிக்கிழமை லொட்ஜ் உரிமையாளர்களை அழைத்து மாநாடு ஒன்று நடத்தினார். தலைநகரில் உள்ள பொலீஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளும் மற்றும் பொலீஸ உயர் அதிகாரிகளும் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் இருந்து வந்து லொட்ஜ்களில் தங்குவோர் தொடர்பாக. குறிப்பாக இளைஞர்கள், யுவதிகள் விடயத்தில் உரிமையாளர்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் -

சந்தேகத்துக்கிடமானவர்கள் குறித்து உடனடியாக பொலீஸாருக்கு அறிவிக்கவேண்டும் என்றும்-அறிவுறுத்தப்பட்டது. முன்னர் கொழும்பு நகரில் இரவு நேரங்களில் கூட தமிழர்கள் அவர்களின் இருப்பிடங்களில் வைத்து கைதுசெய்யப்பட்டு பொலீஸ் நிலையங்களில் அடைத்து வைத்து இம்சிக்கப்பட்டனர்.

இப்போது அந்தத் தொல்லை குறைக்கப்பட்டாலும் அடிக்கடி சுற்றிவளைப்புகள் தேடுதல்கள் நடைபெறுவதால் கொழும்புவாழ் தமிழ் மக்கள் ஒருவகைப் பீதியுடனேயே வாழ்வதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (அ-20)

## அனுராவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து அநுரா பண்டாரநாயக்க நேற்றுச் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்:- எனது தந்தையாரின் 41 ஆவது சிரார்த்ததின நிகழ்வுகள் இன்று ஹொரகல்லவில் உள்ள அவரது சமாதியில் இடம்பெறவிருக்கின்றன. அதையொட்டி அந்தப் பிரதேசம் அதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ள தாக்குதல் அரசுக்குச் சார்பானவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கருதவேண்டியுள்ளது - என்றார். (இ-3)


(78242)

சேவையே எங்கள் எண்ணம்!!

வீணையே உங்கள் சின்னம்!



தேர்தல் வரும்போது தேடி வருபவர்கள் நாமல்ல

தேசம் எரியும்போது ஓடி ஒழிபவர்களும் நாமல்ல

தேசத்தில் நின்று நேசிக்கும் மக்களுக்காக

தியாகத்தை விதைப்பவர்கள் நாமென்போம்!

(ஈ.பி.டி.பி.)

யாழ்.மாவட்டத்தில் விவசாய உட்கட்டுமானப் புனரமைப்புக்காக ஈ.பி.டி.பியின் ஏற்பாட்டில், வடக்குக்கான மீள்குடியேற்ற புனரமைப்பு அதிகாரசபையின் நிதியில் இருந்து 80 லட்சம் ரூபா செலவில் வேலைத்திட்டங்கள் இவ்வாண்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

NIRU TUITION CENTRE

STATION ROAD - KONDAVIL

A/L 2000, 2001

PAPER CLASS

ஆரம்பம் : 28.09.2000 வியாழன்

CHEMISTRY — திரு.N.மகேஸ்வரன் B.Sc. — 3.30 மணி

PHYSICS — திரு.S.சோதிலிங்கம் B.Sc. — 4.30 மணி

(28775)

வீடியோ CD வெளியீடு

பிரபு

ரம்யாகிருஷ்ணன்

*பட்ஜட் பத்மநாபன்

வீடியோ CD & ஓடியோ CD வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

(78778)

விஷ்ணு வீடியோ

கே.கே.எஸ். றோட், கொண்டாவில்.

BRIGHTMAN

கல்வி நிலையம்

(நீராவியடிப் பிள்ளையார் கோயில் முன்பாக)

பிறவுண் றோட் - யாழ்நகர்.

A/L 2002 பௌதிகவியல்

அதிர்வுகளும் அலையியக்கமும்

By. ஜெயசீலன்

ஆரம்பம்: 29.09.2000 Fri. 2.30 p.m.

ஹெந்தல கப்பலில்

உள்ளூர் உற்பத்திப் பொருள்களை ஏற்றுவோர் கவனத்துக்கு

தற்போது பருத்தித்துறையில் சீமெந்து இறக்கிக் கொண்டிருக்கும் ஹெந்தல கப்பலில் வெங்காயம், புகையிலை போன்ற உள்ளூர் உற்பத்திப் பொருள்களை ஏற்ற விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

ஜெசியா ஏஜென்சி

132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Tele Phone - 2407 - Fax - 2140

(C/13072)

சுனில் ஆட்ஸ்

SUNIL ARTS

08. 09. 2000 வரை எம்மிடம் ஒப்படைத்த படச்சுருள்கள் யாவும் பிரதியாக்கம் செய்யப்பட்டு வந்துள்ளன. உடன் பெற்றுக்கொள்ளவும்.

அடுத்த படச்சுருள்கள் 29. 09. 2000 அன்று கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

சுனில் ஆட்ஸ்

இல. 272, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/13077)



மானிட விடியலுக்காகவும்

மகத்தான சமாதானத்துக்காகவும்

வாக்களிப்போம்!



சுயேச்சைக் குழு - 2



(78240)

த. சுபத்திரன் (றொபேட்)

இல. 3

அ. வரதராஜப்பெருமாள்

இல. 1

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எஃப்)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.09.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.